

# திருக்கேதீஸ்வரப் பதிகங்களும் ஆய்வுரையும்

ஆக்கியோன்
சைவப்புலவர்,
அம்பலவாணர் சிறீஸ்கந்தராசா, (எம்.ஏ)

ஓம்

# திருக்கேதீஸ்வரப் பதிகங்களும் ஆய்வுரையும்

ஆக்கியோன்

சைவப்புலவர்,

அம்பலவாணர் சிறீஸ்கந்தராசா, (எம். ஏ)

தலைப்பு : திருக்கேதீஸ்வரப் பதிகங்களும் ஆய்வுரையும்

ஆக்கியோன் : சைவப்புலவர் அம்பலவாணர்
சிறீஸ்கந்தராசா, (எம். ஏ)

பதிப்புரிமை : அருணாசலம் விஜயரூபன், மிருசுவில்.

திகதி : புரட்டாதி மாதம், நாலாம் திகதி,
விரோதிவருடம்

பதிப்பு : குரு பிறிண்டேர்ஸ்,
39/2, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.
தொ.பே: 021 2228266

வெளியீட்டாளர் : திருக்கேதீஸ்வரப் பணிப்பாளர் சபை

விலை : 73/= + 10/= (தபால் செலவு)

# சமர்ப்பணம்



## பஞ்சகிருத்தியத் திருநடனம்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. அணிந்துரை | v |
| 2. வாழ்த்துரை | vii |
| 3. ஆசியுரை | x |
| 4. நன்றிக்கூற்று | xi |
| 5. இறைவணக்கம் | xiii |
| 4. முன்னுரை | 01 |
| 5. திருப்பதிகங்களும் உள்ளடக்கங்களும் | 16 |
| 6. பின்னுரை | 56 |
| 7. முடிவுரை | 70 |

# அணிந்துரை

சிவ சிவ சிவ

*"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச்*
*சென்னியுந்தந்த தலைவன் திருத்தாள் போற்றி"*

எனதுரை அணிந்துரையாகட்டும் என அன்பர் பணித்தனர். நல்லுரை கண்ட அன்பர் அம்பலவாணர் ஸ்ரீஸ்கந்தராசா அவர்கட்கு என்னுரை தேவையென்றதால் பெரியார்தம் நூலிற் கணிசெய்யத் துணிந்தேன்.

அவர்தம் படைப்பினைக் கண்ணுற்றதும் அதிசயித்தேன். காரணமில்லாமலல்ல. ஆங்கிலத்தில் கற்றுத் துறைபோய செம்மல் செந்தமிழ் வல்லான் என்பதே திகைப்பு. பல்துறைவல்ல ஐயா, சிவாத்துவத்தில் மேலோங்கிய பற்றுறுதி கொண்டவர் என்பதை யாத்த இந்நூல் பகராநிற்கின்றது.

பாடல் பெற்ற பெருந்தலம் திருக்கேதீச்சரம். இத் திருத்தலப் பெருமைகளைத் தோத்திரங்களாலும் சாத்திரங்களாலும் பரக்கப் பேசப்பட்டுள்ளமையுலகறிந்த உண்மை.

இவ்வுண்மைகள் யாவும் யாவரிடமும் பரக்க வேண்டு மெனும் பேரவாவினால் ஒவ்வொரு தேவாரங்கட்கும் பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை, எடுத்துக்காட்டுகள் எனப் பெருமுயற்சி செய்து யாத்துத்தந்துள்ளார். அதுமட்டுமா, திருக்கேதீச்சரத் திருதலத்தின் பழைமையான வரலாற்றுத் தரவுகளைத் திரட்டிச் சுருங்கிய முறையில் தெளிவுற உரைக்குந்திறன் பாராட்டிற்குரிய தொன்றாம்.

திருத்தாண்டவப் பெருமானின் நாடகங்கள் நடனங்கள் அதிசயங்கள் அனைத்தையும் வகைப்படுத்தி இரத்தினச் சுருக்கமாக நூலில் வடித்துள்ள பாங்கு பாராட்டிற்குரியது.

தாண்டவங்களின் கருப் பொருட்களை திருமூலநாயனாரின் திருமந்திரத்தாலும், பெரியபுராணத்தாலும் அவற்றில் அமைந்துள்ள வடமொழிப்பதங்கட்குரிய பொருளைத் தூய தமிழாலும் வகுத்தளித்துள்ளார்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் அருளிச் செய்த திருப்பதிகத் தேவாரங்கள் ஒவ்வொன்றிற்கும் பதவுரை, பொழிப்புரை விளக்கவுரை, எடுத்துக் காட்டுகள் தந்தும், அவற்றிடைக்காணும் எல்லோர்க்கும் விளங்காதுள்ள சொற்களைத் தனிப்படுத்தி அவற்றின் பொருள் விளங்கப் பதப் பொருள் காட்டுவது அருமையாம்.

ஆசிரியர் தன்னடக்கத்தோடு அனைத்திடங்களிலும் சிவத்துவத்தின் பெருமையைத் தான் இன்னாவெனக் காட்டிச் செல்வது சிவத்தோடொன்றிய பற்றுறுதியைத் தானாக மிக இலகுவாக விளங்கவைக்கின்றது.

தனித்தமிழ் கற்றார்கூட இதுபோன்ற ஓர்படைப்பினை செய்ய அஞ்சும் இக்காலத்தில், ஆங்கிலத்துறையில் கைதேர்ந்த பெரியார் தற்றுணிவுடன் நுண்ணிய கருத்துக்களை நூலில் ஆங்காங்கே பெய்து, சிறந்ததோர் நூலாக்கஞ் செய்தமை இறும்பூதெய்திடச் செய்கின்றது.

ஐயா அவர்களின் ஊனுடம்பு சிறிது குன்றினும், உள்ளத்துணிவும் தெளிவும், இது செய்வேனென எண்ணியதன் விளைவே இப் பெரும் படைப்பு. எத்தனையோ நூல்கள் புற்றீசல் போலத் தோன்றி மறைவது கண்கூடு. நூலொன்றினை ஆக்கிவிட்டேனென்ற பெருமையுடன் வாழ்கின்ற பெருமை பேசுகின்ற இக் காலத்தில், நிலைத்திருக்கும் தகவுடன் இந் நூலை யாத்தளித்தந்த பெருமை அம்பலவாணர் ஸ்ரீஸ்கந்தராச அவர்களைச் சென்றடையட்டும்.

அன்னார் யாத்தளித்த நூல் அனைவரிடத்திலும் அணிசெய்ய அம்பலத்தான் திருத்தாழ்கள் போற்றி.

சிவ சிவ

புலவர் அ.திருநாவுக்கரசு J.P
சித்தாந்தப் புரவலர்,
சைவநெறிக் காவலர்,
செயலாளர்,
திருக்கேதீச்சரத்திருப்பணி.

21.08.2009

## வாழ்த்துப்பா

### இறைதுதி வெண்பா

*சீரரிய சிவபூமி சேருமுயர் தேன் பொந்தார்*
*தேரரிய திருக்கேதீச் சரப்பதிகம் - ஓரவுமே*
*செப்பமிளிர் சிறீஸ்கந்த ராசரவர் செய்தவுரை*
*ஒப்பருமை உரைக்கவிதை காப்பு*

**வாழ்த்து** *(அறுசீர் விருத்தம்)*

*மண்ணுமோர் புகழ்மன் னாரில்*
*மாண்கேதீச் சரம்மா தோட்டம்*
*பன்னுமோர் பகர்பா லாவி*
*பாகமோர் கௌரி அம்பாள்*
*துன்னுமோர் இறையோ ரெங்கள்*
*துணைகேதீச் சரநா தர்க்காம்*
*உன்னுமோர் பாடற் குற்ற*
*உரைவளம் உரைக்கலாமோ!*

*பாலறா வாயர் மேலும்*
*பகருஞ்சுந் தரனார் தந்த*
*கோலமே கௌரி பாகன்*
*குறித்தகே தீசன் மீதாம்*
*சீலமே பதிகம் காணச்*
*சிறீஸ்கந்த ராசர் செய்த*
*காலமே போற்றுஞ் செம்மைக்*
*கருத்துரைக் கவின தென்னே!*

பற்பல பட்டங் கொண்டோர்
பகர்பொரு ளியலி னோடு
உற்றவர் கல்வி மீதும்
உயர்முது மாணிப் பட்டம்
பெற்றவர் ஆங்கி லஞ்சேர்
பெருஞ்சைவப் புலவ ரானோர்
கற்றவர் சோதி டர்தன்
கவினுரைப் பெருமை என்னே!

அருந்திறல் ஆசா னாயும்
அறையுமா சிரியர்க் கான
பெருந்திறல் விரிவுப் பாடம்
பின்னும்பல் கலையாழ் மீது
வருந்திறல் உரைவி ரித்தோர்
வணிகம் நற் பொருளி யல்நூல்
தருந்திறல் நிலையோர் ஈசன்
தமிழ்க்கவிக் குரையோ தந்தார்!

கேதுமண் டோத ரித்தாய்
கிளருப திஸ்ஸபற் குணனும்
மோதுமன் பருமை செய்த
மூகிழுயர் அருளி னீசன்
மாதுபங் காளன் பாதம்
மதித்தரும் பாடல் கற்று
ஓதமன் புலக தாள
உரையுரைத் துயர்வ துற்றார்!

அட்டனாய் மூவ ராகி
அருளிரு வரும்முக் கண்ணாஞ்
சிட்டனாய்த் தேவாய் ஆளும்
திருக்கேதீச் சரத்தான் பாடல்
திட்டமாய்த் திருந்தக் கற்றுத்
தெளிவுரை பதவு ரைமேல்
இட்டநேர் விளக்க மெல்லாம்
இயம்பிடும் இந்நூல் பொன்னாம்!

உய்யரும் பாடல் செய்த
உயர்ந்தநா யன்மார் வாழ்க
மெய்யரம் பலனார் பாடல்
மிளிருரை மேன்மை வாழ்க
செய்யநம் செய்கை செய்த
சிறிஸ்கந்த ராசர் வாழ்க
வையகந் தொழுகெள ரீசன்
வான்கழல் நாளும் வாழ்க!

**சைவப் புலவர் முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம்,**
(பி. ஏ., டிப். எட்., எம். பில்)
அதிபர், யா/சந்திரபுர ஸ்கந்தரோதய மகா வித்தியாலயம்,
சாவகச்சேரி.

## ஆசியுரை

யாழ்ப்பணத்து இந்து சமயப் பேரவையின் கௌரவ செயலாளரும், சிவபூசாதுரந்தரரும் ஆகிய சிவப்பிரகாசம் சக்தி கிரீபன் அவர்களால் வழங்கப்பட்ட மதிப்புரை.

ஈழநாட்டிலே அமைந்த திருக்கேதீஸ்வரம், திருக் கோணேஸ்வரம் ஆகிய திருத்தலங்களில் எழுந்தருளி அருள் பாலிக்கும் சிவபெருமானது திருவருட்பொலிவைத் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் திருப்பதிகங்களால் பாடியுள்ளனர்.

நாம் பிறவிக் கடலில் இருந்து மீள்வதற்கு, நமக்குக் கிடைத்த அருட்கொடையே யவை. ஓதுந்தோறும் எண்ணுந்தோறும் அருட்கடலில் மூழ வைப்பவை. அத்தகைய திருப்பதிகங்களில் திருக்கேதீஸ்வரத்தில் கோயில் கொண்டெழுந்தருளி அருள் பாலிக்கும் கௌரியம்பிகை சமேத கேதீஸ்வரநாதர் மீது பாடிய பதிகங்களுக்கு, 1968ல் சைவ சித்தாந்த பேரறிஞர் திரு. வச்சிவேலு முதலியார் உரையுடன் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை அவர்களின் உரைக்குறிப்பையும் எழுதி வெளியிட்டுள்ளனர்.

இன்று எமது பேரன்பிற்குரிய சைவப்புலவர் திரு. அம்பலவாணர் சிறிஸ்கந்தராசா எம்.ஏ. முழுமையான உரை நூலொன்றை வெளியிடுவது பெருஞ் சிவ புண்ணியமாகும். இவ்வுரை படிப்போர்க்குப் பக்தியுணர்வை மேம்படுத்தும் மகாவல்லமை பொருந்தியதாகக் காணப்படுகின்றது. அனேகமாக உரையாசிரியர்கள் பொழிப்புரை பதவுரை யுடன் தமது உரையை நிறுத்திக் கொள்வது வழமை. இவ்வாசிரியர் விளக்கவுரையையும் பிறகுறிப்புக்களையும் சேர்த்து வெளியிடுவது படிப்போர்க்கு நல்விருந்தாகவே அமையும்.

இந்நூல் சைவ உலகில் பெரும் வரவேற்புப் பெறும் என்பதில் ஐயம் இல்லை. இந்நூலில் அச்சேற்ற நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**சி. சக்திகிரீபன்**

## நன்றிக் கூற்று

இந்நூலை அமைப்பதற்குப் பலர் தம்முடைய ஊக்கு விப்பையும் பங்களிப்பையுஞ் செய்துள்ளனர். அவர்களிற் சிலர் சிறப்புரிமைச் சுட்டிற்கு உரியவர்.

திருக்கேதீஸ்வரக் கோயிலின் புனருத்தாரணப் பணிப்பாளர் சபையின் செயலாளரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் புலவருமான திருவளர் அம்பலவாணர் திருநாவுக்கரசு சிவபெருமானின் வன்னிவிருட்சத்துக்கு அடுத்துத், தன்னிகரில்லாத் தனிமரமாக மூன்று தசாப்பதங்கள் கோயிலை நெறிப்படுத்தும் நன்னெறியாளன். நயம்பட வுரைக்கும் நற்றமிழ் நாவோன். சிவனடி மறவாச் சிந்தையுடையோன்.

பலவகையான கருத்துக்களையம் ஆலோசனைகளையும் முன்வைத்துச் சிறப்பாக வழிப்படுத்தியவர் சைவப்புலவர் முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம் (பி.ஏ., டிப்.எட்; எம்.பில்,) அவர்கள். இப்பட்டங்களை இலகுவாகச் சுமந்து யாழ்ப்பாணத்து மட்டுவிற் பகுதியில் அமைந்துள்ளது. "சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தை" நலம் பல சேர ஆற்றுப்படுத்தும் நல்லாசான் ஆவர். ஆழக்கல்வியிலும் பரந்துபட்ட அகலக்கல்வியிலும் மேம்பட்ட நல்லறிஞன். குடத்து விளக்குப் போல் அடக்கமுடையார். என்னருமை மாணவனும் ஆவார்.

யாழ்ப்பாணத்துக் கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்து சமயப் பேரவையின் செயலராகப் பணியாற்றுந் திருவளர் சிவப்பிரகாசம் சக்திகிரீபன் கருவிலே திருவுடையார். அத்தளத்தில் ஆடல்வல்லானுக்குக் கோவில் எடுத்துச் சிந்தை நிறைந்த சிவனடியார். இருசந்திகளிலும் சிவபூசை செய்து, மனம் மகிழும் சிவபூசாதுரந்தரர். மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவையென்ற எண்ணக் கருவின் வழியே, தமது கிராம அதிகாரி சேவையைப் புரியும் பண்பாளன்.

திருநெல்வேலியில் அமைந்துள்ள தனலக்குமி புத்தக சாலையின் அதிபர் திருவளர் சின்னத்துரை சதாசிவம் அவர்கள் பல வற்றாலும் நூலின் சிறப்புக்கு வழி சமைத்தவர்.

நான் நோய்வாய்ப்பட்டு இருந்த காலை, பலவகையில் உதவிகள் புரிந்து , என்னை உற்சாகப்படுத்திய திரு சிவக்கொழுந்து சோதிமூர்த்தி குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த நன்றிகள்.

மிகவும் குறுகிய கால எல்லையில் திறம்படச் செயலாற்றிய "குருஅச்சுக்கூடம்" எனது பாராட்டுக்கு உரியது. நல்ல தாளில் அச்சுப் பிழைகள் இன்றிக் கவர்ச்சியான அட்டையுடன் வாசகர் கையுக்கு நூல் வருகின்றது. நயம்படவுரைக்கும் உரிமையாளர் திரு.பா. விமலேந்திரனுக்கும் உதவியாளர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள்.

**அனைவருக்கும் இதயம் நிறைந்த நன்றிகள்!**

## இறை வணக்கம்

ஏகனே போற்றி ஈறிலாப் பதங்காண்
அனேகனே போற்றி
கேதீஸ் வரனே போற்றி பான்மொழி
கௌரி போற்றி
பரசிவ தேவே போற்றி பேரானந்தப்
பொருளே போற்றி
பரதே சியாமெனை யாட்கொள் தலைவனே
பரனே போற்றி

மண்டல மாள்மா லுக்குச் சக்கர
மளித்தாய் போற்றி
மண்டோ தரிக்கு இராவண னையன்ற
ளித்தாய் போற்றி
ஈண்டெனக் குத்தீவி னைய றுத் துப்பெரு
வாழ்வளித் தாய் போற்றி
பண்டுசெய் தீவினை யேற்குத் தண்டம்
அளித்தாய் போற்றி

மாதோட் டச்சிவ நகரில் அருள்செய்
முன்னவா போற்றி
மாமுனி வன்சிவ பூமியென் றானின்
பூங்கழல் போற்றி
மாமிசத் தையென் மீ துவைத்தவனின்
இணையடி போற்றி
மானுடத் தென் வினையெரித் தவன்தாழ்
போற்றி போற்றி

**சிவனார் திருவடிகளுக்குச் சரணம்!!!**

**அ. சிறீஸ்கந்தராசா**

உ

கணபதி துணை

## முன்னுரை

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா"

– ஔவையார்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரனார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

– திருமந்திரம்

ஈழவள நாட்டிலே ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதிக்கு ஆறு வழிபாட்டுத் தலங்கள் வரலாற்றுக்கு அப்பாலாய் சைவ நன்மக்களால் வழிபடப்பட்டு வருகின்றன. மனிதர்களால் திட்டமிடப்படாது தானே தோன்றிய காரணத்தால் இத்தகைய தலம் சுயம்புலிங்கம் என்றும், தான்தோன்றீஸ்வரம் என்றும் அழைக்கப்படும்.

**அவையாவன:**

| | |
|---|---|
| திருக்கேதீஸ்வரம் | - மன்னார் மாவட்டம் |
| திருக்கோணேஸ்வரம் | - திருக்கோணமலை மாவட்டம் |
| முனீஸ்வரம் | - சிலாபம் - வடமேல் மாகாணம் |
| நகுலேஸ்வரம் | - யாழ்ப்பாண மாவட்டம் |
| தான்தோன்றீஸ்வரம் | - ஒட்டிசுட்டான் |
| | - முல்லைத்தீவு மாவட்டம் |
| தொண்டீஸ்வரம் | - கொக்கட்டிச்சோலை |
| | - மட்டக்களப்பு |

பிற்காலத்தில் பிரபுக்களாலும் அரசர்களாலும் பல பிரகாரங்களைக் கொண்ட கோயில்கள் வேதாகம முறைப்படி அமைக்கப்பட்டன. திருக்கேதீச்சரமும் திருக்கோணேஸ்வரமும் பாடல் பெற்ற தலங்களாகும். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், சுந்தர மூர்த்தி நாயனாரும், திருக்கேதீஸ்வரநாதன் மீது பதிகங்கள் பாடித்துதி செய்தனர். பதிகம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்ட ஒரு யாப்பு அமைப்பாகும்.திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் கி.பி ஏழாம் நூற்றாண்டிலும், சுந்தர மூர்த்தி நாயனார் ஒன்பதாம் நூற்றாண்டிலும் வாழ்ந்தனர் என்று இலக்கிய வரலாற்றுநூல்கள் கூறுகின்றன.

புராணமரபின்படி வாயுபகவானுக்கும் ஆதிசேடனுக்கும் பலப் பரீட்சை வாதம் உருவாகியது அதைத் தீர்த்து வைக்கும் முகமாக நந்தி தேவர் அவர்களுக்கு ஆலோசனை கூறி அவர்களை வழிப்படுத்தினார். அவர் கூறியதாவது:

*"மிக்குயர் மேருவின் சிகரம் மூன்றையும்*
*நெக்குறப் பிடுங்கியே நேய வாயுநீ*
*தெக்கணத் தடவொரு தீரஞ் செய்யதைத்*
*தொக்குறு வலியினாற் றடுத்தி சேட நீ"*

வாயுபகவானும் சேடனும் இப்பலப் பரீட்சைக்குச் சம்மதித்தனர். வாயுபகவான் சண்ட மாருதமாகத் தனது சக்தியை உபயோகித்தான். ஆதி சேடன் தனது ஆயிரம் தலைகளால் மேருவின் சிகரங்களை மறைத்தான். அவ்வாறாயினும் வாயு பகவான் மூன்று சிகரங்களையும் இலகுவாகப் பறித்துத் தென்திசையிலே கொண்டு போய்ப் போட்டான்.

*"இப்பரி சமைந்த மூன்றின் இடத்து கோணசைலம்*
*செப்புறு வலத்த தாகுந்திகழ் கந்தமாத னம்நற்*
*றப்புற அமைந்த ஒன்று துலங்குமா தொட்டமோவா*
*திப்புவி யுள்ளோர் போற்ற இறைவனிங்கிருக்கு மென்றும்"*

கந்தமாதனம் தமிழ் நாட்டில் உள்ள தலம் ஏனைய இரண்டும் ஈழத்தில் உள்ளன.

சிவபிரானுக்கும் உமாதேவியாருக்கும் திருக் கலியாண வைபவம் பற்றியும் அதற்குச் சமூகந் தந்தவர்கள் பற்றியுங் கந்தபுராணத்திற் கூறப்பட்டுள்ளன. சமூகம் அளித்தோர் தொகை பெருக்கெடுத்த காரணத்தால், வடபகுதி தாழ்ந்தும் தென் பகுதி உயர்ந்தும் காணப்பட்டது. இருதுருவங்களையுஞ் சமன் செய்வதற்காகச் சிவபெருமான் குறுமுனி என்றழைக்கப்படும் அகஸ்தியரை அழைத்துத் தென்பாகத்துச் செல்லுதி என பூமியை சமனப்படுத்துவாயாக என்று கட்டளையிட்டார். ஈசனுடைய கட்டளைப்படி தென்திசை சென்ற அகஸ்தியர் சிறிதுகாலம் மாதோட்டத்திலுந் தங்கி யெம்பெருமானுக்குப் பூசனை புரிந்தார் என்பது புராண மரபு. அங்கே சிவபெருமான் அகஸ்தியருக்குத் தனது திருமணக் கோலத்தைக் காண்பித்தார்.

"அருவுரு வாக வீசன் அமர்ந்தருள் பொற்பினாலும்
பொருவரு கணங்களேனைப் பூதவே தாளந்துன்று
மொருபெரும் பொலிவினாலும் மோங்கு பேரொளியினாலும்
திருமலி கயிலை யங்கு திகழ்தரக் கண்டு வாழ்ந்தோம்."

சிவபெருமான் காண்பித்த கோலத்தை அகஸ்தியர் இவ்வாறு வருணித்தார். உயிரினங்களெல்லாம் பின்வருமாறு சிவனையுஞ் சக்தியையும் போற்றினர்.

"சக்தியுஞ் சிவமுமாகத் தயங்குமெய்க் கோலநோக்கி
மெய்த்தவப் பேறெமக்கு விளைத்தவா றதிசயித்தோம்"

அகஸ்தியார் பூசித்த அருவுருவ இலிங்கத்தைப் பிற்காலத்தில் நாகர்குலத்தவரும் கேதுவும் பூசித்தார்கள்.

இவ்வரலாறு இவ்வாறு இருக்க, கந்த புராணத்தில், திருப்பாற்கடலைக் கடைந்த வரலாறு கூறப்பட்டுள்ளது. முன்னொரு காலத்தில் தேவர்கள் மரணமிலாப் பெருவாழ்வு வேண்டி மகாவிஷ்ணு மூர்த்தியை அணுகினார். மாயவன் அதற்குரிய வழியைக் கூறினார். அவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். அவர் பின்வருமாறு கூறினார்.

*"மாறில் தேவர்கள் மற்றும் மரண மாற்றாகக்*
*கூறலாவதோர் மருந்துளது அமிர்தமற் றதன்பேர்*
*தேறு மாங்கதற் கிருப்பிடம் பயோததி யதனை*
*ஊறி லாவகை கடைந் தெடுத்துண்ணல் நுங்கடனே"*

பயோததி - (திருப்பாற் சமுத்திரம்) மழைமுகிலைக் கண்ட மயில் போலப் புழகாங்கிதம் அடைந்த தேவர்கள் திருப்பாற் கடலைக் கடையுந்தமது முயற்சியை ஆரம்பித்தனர்.

*"மந்த ரத்தினை மத்தென நிறுவிவா சுகியை*
*விந்தை யார்கடை கயிறென வீக்கிவிண் ணோர்கள்*
*வந்தோர் பாலுற மறுபுற மசுரர்நின் றீர்ப்பச்*
*சுந்த ரத்திருப் பாற்கடல் துளக்கெனக் கடைவான்"*

சூழலும் வேகத்தினால் வாசுகி நஞ்சைக் கக்கியது. உலகை அழிக்கக் கூடிய விஷம் என்பதால் அது ஆலகால விஷம் என அழைக்கப்பட்டது. சுரர் (தேவர்) ஒருபுறமும் அசுரர் மறுபுறமும் நின்று மத்தை ஆட்டினர். தேவர்கள் தம்முடைய உயிருக்கு அஞ்சிச் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான் ஆலால சுந்தரர் மூலமாக அந்த நஞ்சைக் கொணர்வித்துத் தன்வாயில் இட்டரர். பார்வதி அம்மையார் நஞ்சு கீழிறங்காமால் தொண்டையில் பிடித்தார். நஞ்சு தொண்டையில்த் தங்கியது. சிவபெருமானுடைய கழுத்து கருநிறமடைந்தது.. சிவபெருமான் நீலகண்டர் என்ற பெயரையும் பெற்றார். தேவர்கள் சிவனைப் போற்றித் துதி செய்தனர்.

*“புண்ணிய முதலே போதுவெவ் விடமுண் டாகாதெமைக் காத்தாய்*
*மண்ணியல் மாந்திரத் திரயோதசியின் வருபிர தோஷத்தே*
*நண்ணியிவ் விதம்பிரத க்ஷிணம் பண்ணி நமஸ்கரித்திடிலன்னோர்*
*கண்ணிய வரமரு ளென்ற மண்ணில் கனிந்தருள் நல்கினனே”*

பின்னர் அமுதினைக் கடைந்து எடுத்தனர். தேவர்களுடன் அசுரர்களும் அமிழ்தத்தைப் பங்குபோடக் கூடினர். அசுரர்கள் அமிதத்தை உண்டு சாகாவரம் பெற்றால், தேவர்களுக்கு ஆபத்து என்பதை உணர்ந்த மாயவன், அசுரரை அப்புறப்படுத்தக் கருதி மோகினி வடிவொன்றை எடுத்தனன். மோகினி என்பது ஓர் அழகியற் பெண். ஒருவரைத் தவிர ஏனைய அசுரர் மோகினியைத் தொடர்ந்தனர். மாயவன் அமிர்தத்தைப் பங்குபோட ஆரம்பித்த பொழுது சிங்கியின் மகன் சூனு, தேவ வடிவம் கொண்டு, தனது கையை நீட்டியபொழுது, அமிர்தம் கொடுக்கப்பட்டது. இதனை அறிந்த சூரிய சந்திரர்கள் திருமாலுக்குச் சமிக்கை மூலம் இதைத் தெரிவித்தனர். அகப்பையால் சூனுவுக்கு அடிக்க அவன் இரண்டு துண்டங்களாக வெட்டுண்டான. தலை, மீதி உடம்பில் இருந்து பிரிக்கப்பட்டது. அமிர்தம் உண்டதனால் இருதுண்டங்களும் தொடர்ந்து வாழ்ந்தனர். சூனுசிவனை நோக்கித் தவஞ் செய்த காரணத்தால், வேண்டுவார் வேண்டுவதை வழங்கும் பெருமான், வரமளித்தார்.

கந்தபுராணம்- ததீசியுத்தரபடலம் - 334 - 359

*“கூரு மவ்வியோ கக்குறி யாயொளிர் அரவச்*
*சேடு மிக்கொளிர் செந்நிறச் சிரமுனக் குறுக*
*கேடில் கேதுவென் றுன்பெயர் நிலவுக வீழ*
*நாடு சார்ந்தங்கு யாம்மகிழ மாந்தையின் நண்ணி*

"நலங்கொள் குண்டலி யோகநா யதர்களாம் நாகர்
குலம்பு ரிந்துமுன் பூசித்த கோளகை யென்று
பலங்கொள் சீரந்தி பாலாவி மேல்கரைப் பாலே
யிலங்கு மாகண்டங் குயர்சிவ பூசனை புரிதி"

அன்றுதொட்டுத் தலை கேது வென்றும் சென்னிறும் அடைந்தது. கேதுவின் பூசனை வெத முறைப்படி அமைந்தது.

"பாத்தியத்துட னர்க்கிய மாசம் னீயம்
சீர்த்த மஞ்சனந் திருப்பரி வட்டமே பூணூல்
சாத்து மாலைகள் தந்துறை வேத்தியஞ் சமர்ப்பித்
தார்த்  சூரக்கற் பூரவா ராத்திசெய் ததன்மேல்"

சோடசோபசாரம் - 16வகை அவற்றுள் சிலவற்றைக் கேது செய்தான்

**பாத்தியம் :** மூலமந்திரம் (பஞ்சாட்சரம்) அதை உச்சரித்து மூர்த்தியின் திருவடிகளில் தீர்த்தம் சமர்ப்பித்தல்.

**பாத்தியத்துக்குப் பயன்படும் பொருட்கள்:** வெண்கடுகு, இலாமிச்சை வேர், சந்தனம், அறுகு

**அருக்கியம்:** மூலமந்திரத்தினால் மூர்த்தியின் திருமுடியில் தீர்த்தம் தெளித்தல். பயன்படும் பொருட்கள் பால், தருப்பைநுனி, அட்சதை (பச்சை அரிசி) எள், யவம், வாற்கோதுமை, சம்பாநெல், வெண்கடுகு

**ஆசமனீயம்:** மூலமந்திரத்தை ஐந்து முறை உச்சரித்து மூர்த்தியின் திருமுகத்தில் தீர்த்தம் தெளித்தல்

**பயன்படும் பொருட்கள்:** சாதிக்காய், கிராம்பு, ஏலம், பூலாக்கிழங்கு, சணபகமொட்டு.

**திருமஞ்சனம்: பயன்படுவன:** பாதிரிப்பூ, தாமரைப்பூ, செங்கழுநீர், ஏலம், இலாமிசனவேர், வெட்டிவேர், இலவங்கைப்பட்டை, சந்தணம், கருப்பூரம்.

**ஆவாகனம்:** மூலமந்திரத்தை உச்சரித்து சுவாமியை எழுந்தருளும்படி அழைத்தல்.
திருப்பரிவட்டம்: தெய்வத்திற்குச்சாத்தப்படும் ஆடை

சிவபெருமான் கௌரியம்பாளொடு பாலாவியின் கரையில் காட்சி கொடுத்துப் பின்வருமாறு ஆசீர்வதித்தார்.

*"கேது கேணலங் கிளர்சிவ பூசனை புரிநீ*
*ஏது வாகவித் தலம்மஹா சிவதல மாகித்*
*தீதில் தண்பெயர் நின்பெயரானில வுகநீ*
*மாதி ரம்புகழ் ஞானகாரகனுமாய் மகிழ்"*

அன்று தொட்டு பாலவியில் அமர்ந்த சிவபரம்பொருள் கேதீச்கரன் என்றழைக்கப்பெற்றனர்.

சிவன் வைகாசிமாதம் விசாக நட்சத்திரம் கூடும் பொழுது சிவன் கௌரியம்பாளொடு பாலாவிக் கரையில் இடப வாகனத்தில் கேதுவுக்குத் தோன்றியருளினார்.

*"இடபமா சத்தினொன்று மீடில் சேர் விசாக நன்னாள்*
*நடுவில் கேது வீசன் நாடுசீர்க் கௌரியோடும்*
*இடபமூர்ந் தணைந்து தீர்த்த மேற்றருள் சிறப்பி னிந்தப்*
*புடவியோர் புகழுந் தெய்வப் புண்யதீர்த்தமுமீஃதாகும்"*
என்று திருவாய்மலர்ந்தருளினார்.

பஞ்சாட்சர மந்திரத்தைக் கேது பன்முறை செபித்து ஈசன் திருவருளை வேண்டி நின்றான்.

"அளியுலாவரு மின்னெனப் பொன் னொளிர்ந் திலங்கும்
ஒளியை யுள்கியுள் ளுரகியங் கோருமைந் தெழுத்தைத்
தெளிய வோதியே ராயிர முருச்செபித்தின்பக்
களியின் மூழ்கியங் கந்நிலை காதலித் திருந்தான்."

கேதுவின் பின் துவஷ்டா என்ற ஞானி இப்பீடத்தைப் போற்றி வணங்கினான்.

"ஓத ரும்விசு வப்பிர மத்தினின் றதித்தே
வேத வைதிக விதிமுறைக் குரியனாந் துவஷ்டா
போத யானநற் சூத்திரம் புகல்நெறி பேணித்
தீத கல் ஸ்நா னாதிகள் செய்கடன் தொடங்கி

மேலே கூறப்பட்டவன் தேவதச்சன் விசுவப் பிரமன் என்றும் அழைக்கப்படுவான். விசுவப்பிரமன் மரபிலே தோன்றியவர்கள் மயனும் அவன் தமையன் தேவதுவஷடாவும் இவர்களால் அழகுறக் கட்டுடியெழுப்பப்பட்டது, திருக்கேதீஸ்வரம். மயனின் மகளும் இராவணனின் மனைவியுமாகிய மண்டேதரி இத்தலத்தை வழிபட்டாள் என்பதற்குச் சான்றுகள் பல உண்டு. இவை இவ்வுரையின் பிற்பகுதியில் கூறப்பட்டுள்ளன.

பாரதக் காவியத்தில் உள்ள முக்கிய பாத்திரங்களுள் ஒருவரான அருச்சுனன் திருக்கேதீஸ்வர நாதனை வழிபட்டாரெனத் தட்சிணகைலாய புராணங்கூறுகின்றது. சிங்கள இனத்தின் முன்னோடியான விசயன் இலங்கைக்கு வந்த பொழுது அவனுடன் வந்த உபதிஸ்ஸ என்ற பிராமணன் திருக்கேதீஸ்வரத்தில் பூசை செய்தான் என்று சிங்கள மக்களின் புராதன வரலாற்று நூலான மகாவம்சம் கூறுகின்றது.

துவஷடா நித்திய பூசைகள் தவறாது ஆற்றி மாந்தையைத் தனது தலை நகராகக் கொண்டு நெடுங்காலம் ஆட்சி செய்தான். அவனாற்றிய பூசனையின் சிறப்பைப் பின்வருமாறு புராணம் கூறுகின்றது.

"பொங்குகுங் கிலிய வாசனை கிளரப்
புனுகுநெய் வாசனை கிளர்ந்த
துங்கமார் களப வாசனை கிளரக்
கற்பூர வாசனை கிளரப்
பங்கமில் கனிகள் பண்ணியம் முகவா
சம்பயில் வாசனை துன்றி
எங்குமாய்க் கிளர எழுந்தது துவஷ்டா
இதயவா சனைநலங் கிரைந்ததே"

தமிழ் நாட்டின் தென்கீழ்த் திசையிலே கந்தமாதனம் என்றொரு மலை உளது. தபசிகள் வாழ்ந்து தவம் புரியும் மலையென அது புகழ் பெற்றது. அங்குள்ள முனிவர்களுக் கெல்லாம் முனிவராக இருந்தவர் மாதேவடிகள். மாதேவா, மாதேவா என்ற ஒலி அவருடைய உதடுகளில் இருந்து எந்நேரமும் பிறப்படுதலினால் அலர் "மாதேவா" அடிகள் என அழைக்கப்பட்டார். ஆகாய மார்க்கமாக இராமேஸ்வரத்தில் இருந்து மாதோட்டத்தை வந்தடைந்தார். மாதோட்டத்தில் இருந்த தவசிகளுக்கு ஞான விளக்கம் அளித்தார் " ஒவ்வொரு உடலின் இருதயக் குகையில் இரு ஆன்மாக்கள் உள்ளன. ஒன்று ஆண்டானான சிவப்பிரமம், மற்றையது அடிமையாகிய உயிர். உலக பாசங்கள் அனைத்தையுந் திறந்து சிவபெருமான் திருவடிகளை இமைப் பொழுதும் நீங்காமல் சிந்தையில் வைப்பவர்கள் தம்முள்ளேயுள்ள பிரமத்தைக் காண்பார்கள்" என்பதே அவரின் உபதேசச் சுருக்கம். திருக் கேதீஸ்வரம், தாய்த்தமிழ் நாட்டிலுள்ள சிவதலங்கள் போன்று, ஈழ நாட்டிலே விளங்கியது.

சிவபெருமானின் பஞ்சகிருத்தியத் திருநடன வடிவம் பின்வருமாறு

1. சிருட்டி - உடுக்கை
2. ஸ்த்தி - அபயகரம்

3. சம்காரம் - ஏந்தியிருக்கும் அக்கினி

4. திரொதமை - ஊன்றியதிருவடி

5. அனுக்கிரகம - தூக்கியதிருவடி (குஞ்சிதபாதம்)

"உண்மை விளக்கம்" நூலில் கூறப்பட்டுள்ளது.

தோற்றந் துடியதனிந் தோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்கார - முற்றமா
யூன்று மலர்ப் பாதத்தி லுற்றதிராத முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

திருக்கேதீஸ்வரத்தில் அமைக்கப்பட்டுள்ள நடராசர் மண்டபத்தில் சிவன் பஞ்சகிருத்திய மூர்த்தியாகக் காட்சியளிக்கின்றரர்.

திருக்கேதீஸ்வரத்தைச் சூழ்ந்து மக்கள் குழுமி வாழ்வியலை ஆரம்பித்த காலத்தை நோக்குதல் பயனளிக்கும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. கிருஷ்ணராசா பின்வருமாறு கூறுகின்றார்.

"இற்றைக்கு 50கோடி வருடங்களுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்ட இம்மனித இனமானது இற்றைக்கு 5000 ஆண்டுகள் வரைக்கும் வாழ்ந்தமனித சமூகம் சீரற்ற குழும வாழ்வியலின் அடிப்படையிலேயே வாழ்ந்து வந்துள்ளனர் என்பது வெளிப்படையாகின்றது. பேராசிரியர் திரு. கிருஷ்ணராசா மேலும் கூறுகின்றார். "மொழியுடன் இணைந்த எழுத்து வழக்கு, மக்கள் கூடும் ஒருமன்று, கோயில் முதலியன தோற்றின. நாகரிகமற்ற மக்கள் தம் முன்னோரையும் ஆவிகளையும் தம்மை விழிப்படுத்தும் தெய்வங்களாக வணங்கி வந்தனர். நாகரிமடைந்த மக்கள் தம்முன்னோரை வழிபடும் முறையில் இருந்து விலகித் தெய்வங்களை வணங்க ஆரம்பித்தனர். தெய்வம் என்றதோர் நம்பிக்கை யேற்பட்ட காலப்போக்கில் தத்துவ ஞானிகளும் தோற்றி

தெய்வ வழி பாட்டுக்குத் தத்துவார்த்தங்களையும், அவற்றின் எல்லைகளையும் வகுத்தனர். தத்துவாரத்த நிலையிலிருந்து தெய்வநம்பிக்கையும் வகுத்தனர். தத்துவார்த்த நிலையிலிருந்து தெய்வநம்பிக்கையானது பக்திநிலையை நோக்கி நகர்ந்தது. பக்தி நிலைக்கு ஆதாரமாகப் பாடல்களுந் தோத்திரங்களும் பல கலைகளும் உருவாகின. சங்கீதம், நடனம், கட்டிடக்கலை, சிற்பக்கலை, உலோகவேலைகள், கல்வெட்டுக்கள், பூசைமுறைகள், வழிபாட்டு முறைகள், சமய இலக்கியங்கள், இன்னோரன்ன கலைகளுந் தோற்றின"

இறைவனாற் போதிக்கப்பட்ட சமயங்களும், இறைவன் தூதுவர்களால் போதிக்கப்பட்ட சமயங்களும், ஞானிகளால் உபதேசிக்கப்பட்ட சமயங்களும் என மூவகைப்பட்ட சமயங்களுந் தோன்றின.

இந்தியாவின் வட பகுதியில் இருந்து தெற்கு நோக்கி நகர்ந்த மக்கள் தமக்கென மொழியையும், மதத்தையும் கலாசாரத்தையும் இயல்பு நிலையில் இருந்து மேலும் வளர்த்தனர். மேலும் கடல் கடந்து பலதீவுகளிலும் வாழ்வியலை வகுத்தனர். தென்னாட்டின் கீழ்த்திசையில் அண்மித்து உள்ள இலங்கைத்தீவிற்கும் இடம் பெயர்ந்தனர். பேராசிரியர் கிருஷ்ணராசா மேலும் கூறுகின்றார். மன்னார் குடாவில் விளைந்த முத்துக்களைச் சிந்துவெளி மாந்தர் விரும்பியணிந்து உள்ளமைக்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளமையை அவதானிக்கும் பொழுது, அவ்வளர்ச்சி நிலையை உறுதிப்படுத்துகின்றது. இலங்கைத்தீவின் சமுக, பண்பாட்டு உருவாக்க மையமானது மாந்தை உள்ளிட்ட மன்னரர் குடாப்பரப்பில் இருந்தே உருவாகி மல்வத்தை ஓயா வழியாகத் தீவின் உட்பரப்பினைச் சென்றடைந்தது.

கிறீத்துவ சகாப்தம் சுமார் எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் இடம் பெற்ற இராமாயண காதையில் இலங்கை இணைக்கப் பட்டுள்ளது. இலங்கை அரசன் இராவணன் சிவபக்தனாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளான். இராமரும், அவரின் படைவீரரும் கடல்கடந்து மன்னர் மூலமாக உள்நாட்டில் புகுந்ததற்கு

இராமேஸ்வரம், இராமர் அணை, சீத்தா எலியா, முதலியன சான்று பகரும். பிற்காலங்களில் சேரசோழ படையெடுப்புக்களும், கலிங்க இராச தானியின் செல்வாக்கும் இலங்கையின் உள்நாட்டில் பரவுவதற்கு மாந்தை போக்குவரத்து மையமாக அமைந்தது.

உயர்ந்த நாகரிகத்தின் தோற்றமும் செயற்பாடும், காலத்துக்குக் காலம் நாடுகளுக்கு இடையே நகர்ந்து சென்றதை வரலாற்று வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர். கிறீஸ்துவ சகாப்தம் நாலாயிரம் ஆண்டுகளுக்குமுன் உன்னத நாகரீகமாக அமைந்தது, கிரேக்க நாகரீகம். கிரேக்க நாட்டு விஞ்ஞானிகளும் தத்துவ ஞானிகளும், கணிதமேதைகளும் இட்ட அத்திபாரமே, பிற் காலத்தில் இத்துறைகளின் விருத்திக்கு வித்தாக அமைந்துள்ளது. கிறீஸ்த்துவுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ரோம நாகரீகம் கிரேக்க நாகரீகத்தை விஞ்சியது. முன்னாள் தொல்லியல் திணைக்களத்தலைவர் டாக்கடர் எஸ். பரனவித்தானவினால் ஆராயப்பட்ட தளமாக மாதோட்டம் அமைந்தது. கிரேக்க உரோம நாணயங்களும் ஏனைய சிதைவுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஏற்றுமதி இறக்குமதி பண்டமாற்றுமையமாக மாதோட்டம் இருந்ததை இத்தொல்லியற் பொருட்கள் சான்று பகருகின்றன.

பிரபல்யமான சந்தையாக இருந்த காரணத்தால், இது மகாசந்தை என்று அழைக்கப்பட்டுப், பின்பு இச்சொல் மருவி மாசந்தை என்று அழைக்கப்பட்டது. காலப்போக்கில் மேலும் மருவி மாசந்தை என்பது மாந்தையாக மாறியது.

"மாசந்தை யெனும்பெயரின் மருஉருவாகும் மாந்தை யொன்றே
தேசந்திக் கெலாம் பரவித்திகழும்ரோம் கிறீஸ்யவனம்
பேசுறுசீர்ச் சீனமெலாம் பிறங்கியதும் பெருங்கவிஞர்
வாசமலர் நறுங்குழலார் வனப்பொழில் போல்வதுமன்றே

தென்னிந்தியாவில் சோழ மன்னர்கள் பெரிய இராச்சியம் ஒன்றையமைத்து அவ்விராச்சியத்தின் அதிகாரத்தைக் கடல் கடந்த தீவுகளிலுஞ் செலுத்தினர். இலங்கை, மாலைதீவு, இந்தோனேசியா போன்ற இடங்களில் சிற்றரசரை அமைத்தனர். 1017ம் ஆண்டளவில் இலங்கையில் சோழராட்சி பலப்படுத்தப்பட்டுள்ளது. பொலனறுவையைத் தலைநகராகக் கொண்டு அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் இலங்கை ஆட்சி முறை சோழமயமாக்கப்பட்டது. மாதேட்டம் "ராஜராஜபுரம்" என பெயர் சூட்டப்பட்டது. முதலாம் இராஜேந்திரன், முதலாம் இராசராஜன் என்பார்கள் சோழ அரசர்களாக இருந்தனர். இராஜராஜ ஈஸ்வர் என்ற ஒரு சிவன் கோயில் மாதோட்டத்தில் அமைக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இக்கோவிலைப்பற்றி எதனையும் தெளிவாகக் கூற முடியாது. திரு.கிருஷ்ணராசா பின்வருமாறு கூறியுள்ளார். "மாந்தையான இராஜராஜபுரமும் திருக்கோணமலையும் சோழரது இலங்கைக்கான இராணுவ மையங்களாகத் தெரிவு செய்யப்பட்டு இராணுவ கடற்படை நடவடிக்கைகளின் ஒருங்கமைக்கப்பட்ட மையங்களாக்கப்பட்டன".

மேலும் இராசதானியான பொலநறுவையில் இருந்து ஒரு தெரு மன்னார்நோக்கி அமைக்கப்பட்டது. இத்தெரு இராஜராஜப் பெருந்தெரு என அழைக்கப்பட்டது.

சுமார் 1017 - 1070 வரை சோழராட்சி இலங்கையில் நீடித்தது. சுமார் இருநூறு ஆண்டுகளுக்குப்பின் பாண்டிய அரசர்கள் இலங்கையின் வடபகுதியில் ஒரு தமிழ் இராட்சியத்தை நிறுவினார்கள். சுந்தர பாண்டியனுடைய படைத்தளபதிகளில் ஒருவரான ஆரியச்சக்கரவர்த்தி என்பவன் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு இலங்கையின் வடபகுதியில் தங்கள் அதிகாரத்தைச் செலுத்தினர். சுந்தர பாண்டியனுடைய படைத்தளபதிகளில் ஒருவரான ஆரியச்சக்கரவர்த்தி என்பவன் நல்லூரை் தலைநகராகக் கொண்டு இலங்கையின் வடபகுதியில் ஒரு தமிழ் இராச்சியத்தை நிறுவினான் என "யாழ்ப்பாண வைபவமாலை" என்ற நூல்

கூறுகின்றது. மாதோட்டம் இதன் பகுதியாக இருந்தது. தம்முடைய குடும்பப் பெயரான ஆரியச்சக்கரவர்த்தி என்ற பெயரில் சுமார் 300 ஆண்டுகள் இலங்கையின் வடபகுதியை ஆட்சி புரிந்தனர். இவர்கள் சிங்கை ஆரியர் எனவும் அழைக்கப்பட்டனர். சிங்கை நாடு என்பது இலங்கையின் வடபகுதியைக் குறிக்கும். இதன் முக்கிய துறைமுகம் மாதோட்டம் எனப்பட்டது. இவர்கள் பிராமணர்களாக இருந்த காரணத்தால் ஆரியர் என்ற பெயரைச் சூடினர். இவர்கள் இடபக்கொடியை உபயோகித்தனர். நாலாந் தமிழ்ச் சங்கம் என்றொரு சங்கத்தை நிறுவினர். பல இலக்கியங்களையும் நூல்களையும் ஆக்கினர்.

செகராசசேகரன் என்ற சிங்கை ஆரியன் ஆட்சிசெய்த காலத்தில் போத்துக்கேயர் மன்னாரில் ஒரு கோட்டையை அமைத்து ஒரு சிறுபடையையும் அங்கு அமர்த்தினர். கடல் முகப்பில் உள்ள நகர, கிராமவாசிகளைக் கத்தோலிக்க மதத்துக்கு மாற்றினர். இச்செயல் செகராசசேகரனுக்கும் அவன்பின் அரசு செய்த சங்கிலி எனப்படும் சிங்கை ஆரியனுக்கும் பெருங்கோபத்தை உருவாக்கியது. சங்கிலி மன்னன் கட்டளைப்படி 600 உரோமன் கத்தோலிக்க மக்கள் கொலை செய்யப்பட்டனர் எனப் போர்த்துக்கீச ஆவணங்கள் கூறுகின்றன. இத்தொகை மிகைப்படுத்தப்பட்டிருக்கலாம். றோமன் கத்தோலிக்க குரு சுவாமி எஸ் . ஜி பெரேரா என்பவர் 40.000 கத்தோலிக்கர், மன்னர் தீவில் கொலை செய்யப்பட்டதாகக் கூறியிருந்தார். பின்பு மூண்ட யுத்தம் ஒன்றில் சங்கிலி மன்னன் இறந்தான். அவன்பின் இருவரை ஒன்றன்பின் ஒன்றாக அரசர்களாகப் போத்துக்கீசர் அமர்த்தினர். இறுதியில் தாமே அரசபொறுப்பை 1619ல் ஏற்றனர்

ஒல்லாந்தர் இலங்கையில் காலடிவைக்க 17ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆரம்பித்தனர். படிப்படியாக போர்த்துக்கீஸரின் பிரதேசங்கள் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டு இறுதியாக யாழ்ப்பாண இராச்சியம் 23ம் திகதி யூன் மாதம் 1658ல் கைப்பற்றப்பட்டது. அதன்பின் புரட்டாஸ்தாந்து சமயம்

முன்னெடுக்கப்பட்டது. கத்தோலிக்க குருமார் இலங்கையை விட்டு வெளியேறினார். சுமார் நாலு நூற்றாண்டுகள் இக் கோயில் இருண்ட காலமாக அமைந்தது. 1690ல் போர்த்துக்கீசரால் கோயில் இடிக்கப்பட்டது. அங்கு கோயில் தொண்டில் இருந்த பிராமணர்கள் தீர்த்தக்கிணற்றுக்குள் விகிரகங்கள் சிலவற்றை இறக்கிவிட்டனர். வேறு சில விக்கிரகங்களுடன் அவர்கள் வெளியேறினர். மடுப்பகுதியில் உள்ள நீர்த்தேக்கத்தருகே கரந்து வாழ்ந்தனர் என்பது கர்ணபரமபரைச் செய்தி

*1872*ம் ஆண்டில் நல்லைநகர் ஆறுமுக நாவர் பெருங் காட்டின் மத்தியிலேயிருந்த இடிபாட்டின் சிதைவுகளை அடையாளங் கண்டார் என்பது அறியக்கிடக்கின்றது.

ஓம்
கணபதி துணை

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு
ஒளவை

நாடும் நகரமும் நற்றிருகு கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொண்மின்
திருமந்திரம்

மூர்த்திதலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க் கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே
தாயுமான சுவாமிகள்

**திருக்கேதீஸ்வரச் சிவன் கோயில்**

**மாவட்டம்** - மன்னார் மாவட்டம்

**மூர்த்தி** - திருக்கேதீஸ்வர நாதரும் கௌரியம்பாளும்

**தலம்** - திருக்கேதீஸ்வரம்

**தீர்த்தம்** - பாலாவி

**விருட்சம்** - வன்னிமரம்

திருச்சிற்றம்பலம்

# திருக்கேதீஸ்வரப் பதிகங்கள்

*திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது*
*அவர்காலம்: கி.பி ஏழாம் நூற்றாண்டு*

*பண்: நட்டராகம்* *இராகம்: பந்துவராளி*

1. *"விருது குன்றமா மேருவி னாணர*
*வாவனலெரி யம்பாப்*
*பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்*
*றுறைபதி யெந்நாளும்*
*கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்*
*பொழிலணி மாதோட்டம்*
*கருதநின்றகே தீச்சரங் கைதொழக்*
*கடுவினை யடையாவே*

**பதவுரை:**

விருது மாமேரு குன்றம் வில்- வெற்றிச் சின்னமாகத் திகழ்கின்ற மாமேரு மலையினை வில்லாகவும்; அரவு நாணரவா- வாசுகி என்ற பாம்பினை நாணாகவும்; அனலெறியம்பாப் பொருது - சுடர்விட்டெரிகின்ற நெருப்பை அம்பாகவும் போரிட்டு; மூவெயில் - முப்புரங்களான பொன்; வெள்ளி; இரும்பு ஆகியவற்றால் அமைக்கப்பட்ட பறந்து திரியும் வல்லமையுடைய அந்தரக் கோட்டைகளை; செற்றவன் - சாம்பராக்கிய இறைவன்; எந்நாளும் - ஆதிமுதல் ஊழிக்காலம் வரையும்; பற்றி நின்று உறைபதி- விட்டு நீங்காமல் இருந்து திருவருள் பாலிக்கின்றதும்; கனைகடல்- அலைகள் மோதுதலால் எழுப்பப் படுகின்ற பேரொலியையும் உடைய கடலை ஒரு புறத்திலும்; கடிகமழ் பொழிலணி - நறுமணம் வீசுகின்ற அழகான சோலைகளை

மறுபுறத்திலும் உடைய, மாதோட்டம் என்ற பெயரினைத்தாங்கிய பதியின் கண்ணே; கருதுகின்ற கேதீச்சரம் - வீடுபேற்றை விரும்பி இமைப்பொழுதும் மறவாது நினைந்திருக்கும் தேவர் மனிதர், நரகர் என்ற மூவகையினராலும் போற்றப்படுகின்ற திவ்விய தலம் அமைந்துள்ளது; கைதொழக் கருவினை அடையாவே- மனதில் இருத்தி இரு கைகளையும் உச்சிமேல் வைத்துத் திரியாங்கமாக வணங்குகின்ற சிவனடியார்களைக் கொடிய துன்பங்கள் பாதிக்கமாட்டா.

**பொழிப்புரை:**

சிவபெருமானுடைய வெற்றிச் சின்னமாக விளங்குகின்ற மாமேருமலையினை வில்லாகவும், வாசுகி என்ற பாம்பை நாணாகவும், எரிகின்ற நெருப்பை முனையாகவுள்ள அம்பாகவுங் கொண்டு, போரிட்டு முப்புறங்களையும் எரித்த இறைவன் உறையும் பதியானது குமுறுகின்ற கடலையும், வாசனை வீசுகின்ற சோலைகளையும் உடைய மாதோட்டம் என்னும் நகரமானது, அங்கு எழுந்தருளியிருக்கும் ஈசனைத் தினமும் வணங்கிப் போற்றக் கொடிய துன்பங்கள் சிவனடியார்களை வந்து அணைய மாட்டா என்பதாகும்.

**விளக்கவுரை:**

வாசுகி என்பது அட்ட நாகங்களில் ஒன்று அது கிழக்குப்பக்கத்தில் பூமியைத் தாங்குகின்றது. அவை:

அனந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்க பாலன், தக்கன், பதுமன், மகாபதுமன், வாசுகி எண்மர். தாரகாக்கன், கமலாக்கண், வித்யுன்மாலி என்ற அசுரர்கள் முறையே பொன், வெள்ளி இரும்பினால் ஆக்கப்பட்ட அந்தரக் கோட்டைகளில் இருந்து தேவர்களுக்குச் சொல்லொணாத் துன்பங்களைச் செய்துவந்தனர். தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். இறைவன் அவர்களுடைய துன்பங்களை நீக்கத் திருவுளங்கொண்டு மேலே

கூறப்பட்ட ஆயுதங்களுடன் போருக்குச் சென்றார். தான் போருக்குச் செல்வதனால் தேவர்கள் கர்வம் உற்று இருப்பதைச் சிவன் அவதானித்தார். எனவே இறைவன் போருக்குச் செல்லாது புன்சிரிப்பு மூலம் திரிபுரங்களைச் சாம்பராக்கிய காரணத்தால் இறைவனுடைய முடிவிலா ஆற்றல் உணரப்பட்டது.

இப்புராண பாரம்பரியத்துக்குத் திருமூலர் சித்தாந்த விளக்கம் அளித்துள்ளார்.

*"இப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்*
*முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்*
*முப்புர மாவது மும்மல காரியம்*
*அப்புர மெய்தமை யாரறிவாரே"*

மும்மலம் என்பது ஆணவம், கன்மம், மாயை ஆகும். இம்மூன்றின் வெளித்தோற்றமே கோட்டைகள். அசுரர்கள் எனப்படுவோர், மிக்க வலிமையும் கொடிய சிந்தனைகளும் உடையோர். இப் பான்மை உடையவர்களின் மும்மலங்களையுஞ் சாம்பராக்கினார் என்பதே திருமூலரின் வியாக்கியானம். சிவபெருமானுடைய திருவருளினால் கொடிய வினைகளில் சிக்குண்ட ஆன்மாக்களின் மும்மலங்களையும் போக்க முடியும் என்பதே உய்த்துணரக் கூடியதாகும்.

"கேதீச்சரங் கைதொழக் கடுவினை அடையாவே" என்பதால் வழிபடுவோருக்குப் பகையாகவுள்ள வினை நீறுபடுதல் நிச்சயமாகும். சிவ வழிபாடு உள்ளோர் காக்கப்படுவர். பத்துச் சிவபுண்ணியங்களும், சிவதொண்டுக்களும் கூறப்பட்டுள்ளன. இவைகளை யாற்றுஞ் சரியை, கிரியையாளர்கள் உள்ளத்தில் மாசிலராக இருக்க வேண்டும். பஞ்சமா பாதகங்களைச் செய்வோர் இவற்றைச் செய்வதனால் பயனிலவாகும்.

*"நலமில னண்ணார்க்கு, நண்ணினர்க்கு நல்லன்,*
*சலமிலன் பேர் சங்கரன்"*

என்ற திருவருட்பயன் நினைவு கூரற்பாலது.

"சலமிலன்" - சாராதார் பால் அவனுக்கு வெறுப்பில்லை

2. பாடல் வீணையர் பலபல சரிதைய
   ரெருதுகைத் தருநட்டம்
   ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
   சுண்டிருள் கண்டத்தர்
   ஈட மாவது இருங்கடற் கரையினி
   லெழிறிகழ் மா தோட்டம்
   கேடி லாத கேதீச்சரந் தொழுதெழக்
   கெடுமிடர் வினைதானே

**பதவுரை:**

பாடல் வீணையர் - சிவபெருமான் வீணையை மீட்டுப் பாடும் பாங்கு கொண்டவர், பலபல சரிதையர்- பல வகையான வரலாற்று முறைகளையும் செயற்பாடுகளையும் கொண்டவர், எருது உகைகத்து அரு நட்டம் ஆடல் பேணுவர் - இடபவாகனத்தை செலுத்திப்பல வகையான நடனங்களைப் புரிபவர்; அமரர்கள் வேண்ட நஞ்சுண்டு இருள் கண்டத்தர் - தேவர்கள் வேண்டுதல் செய்து வணங்கி நின்ற பொழுது, நஞ்சினை உண்டு அதனால் கரிய கண்டத்தைப் பெற்ற காட்சியை உடையவர் ; ஈடமாவது- அவர் உறையும் இடமாவது; இருங்கடற் கரையினில் எழில் திகழ் மாதோட்டம் - பெரிய கடற்கரையின் கண்ணே அழகு பொருந்த அமர்ந்திருக்கின்ற மாதோட்ட நகர் ; கேடிலாத கேதீச்சரம் ஆகும் - என்றும் அழிவில்லாத திருக்கேதீச்சரம் ஆகும்; தொழுது எழ அதனை அட்டாங்கமாகவேனும், பஞ்சாங்கமாகவேனும் வணங்கி எழுந்தால்; அடர்வினை தானேகெடும்- தாக்குகின்ற கொடிய பாவங்கள் தாமே அழிந்து போகும்,

**பொழிப்புரை:**

திருக்கேதீஸ்வர நாதன் வீணையை மீட்டுப் பாடும் தன்மை கொண்டவர். வீணாகானத்தில் மிக்க ஆர்வம் கொண்டவர். பலவகையான வேறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டவர். இடபவாகனத்தை ஊர்தியாகக் கொண்டவரும், பல வகையான பஞ்சகிருத்தியத் திருநடனங்களைக் கொண்டவரும், தேவர்களைக் காப்பற்றுதற்காக ஆலகால விஷத்தை உண்டதனால், ஏற்பட்ட கழுத்துத் தழும்பை உடையவர் என்பதனால் கரிய கண்டன் என அழைக்கப்படுபவருமானவர். பெரிய கடற்கரையின் கண்ணே அமைந்துள்ள அழகு பொருந்திய மாதோட்ட நகரைத் தனது இருப்பிடமாகக் கொண்டவர். அங்கே அமைந்துள்ள எக்காலமும் அழிவில்லாத கேதீச்சரத்தைத் தொழ எத்துன்பங்களும் தாமே அகன்று விடும்.

**விளக்கம்:**

இடமாவது என்று அமைய வேண்டியது, யாப்பு இலக்கணத்துக்கு ஆக "ஈடம்" என அமைந்தது. திருப்பாற் கடலைக் கடைந்த வரலாற்றையும் சிவன் நஞ்சுண்டவரலாற்றையும் இந்நூலின் முன்னுரையிற் காண்க. சூனு என்பவன் பாம்பு வடிவம் பெற்று தலைவேறாகவும் உடல்வேறாகவும் அமைந்ததையும், சிவனிடம் தலை சென்று வரங்கேட்டதையும் அப்பகுதியிற் காண்க. கேதீச்சரம் என்று இத்தலத்துக்கு பெயர் தோன்றிய வரலாறும் கூறப்பட்டுள்ளது. தாமரை மலர்போன்ற வட்டவடிவமான பீடத்தில் கேது பூசனை செய்த முறைமை நோக்கற்பாலது.

*"பார்த்தி பத்துடன் னர்க்கிய மாசம னீயம்*
*சீர்த்த மஞ்சனந் திருப்பரி வட்டமே பூணில்*
*சாத்து மாலைகள் தந்துறை வேத்தியஞ் சமர்ப்பித்*
*தார்த்தி கூரைக்கற் பூவாராத்திசெய் ததன்மேல்*

பாத்தியத்தில் உபயோகிக்கப்படும் பொருட்கள்:

இலாமிச்சை, அறுகு, சந்தனம், வெண்கடுகு, அட்சதை, சலம்

**ஆசமன்யம்:** இலவங்கம், பச்சைக் கற்பூரம், சாதிக்காய், சிற்றேலம், பேரேலம், சீந்தில்

**ஆரக்கியம்:**

அட்சதை, தர்ப்பைநுனி, வெண்கடுகு, சலம், பால், எள் இப்பூசனைகள் காரணமாக சிவன் கேதுவை ஆசீர்வதித்தார்.

"கேது கேணலங் கிளர்சிவ பூவை புரிநீ
ஏத வாகவித் தலம்மகா சிவதலா மாகித்
தீதில் தன்பெயர் நின்பெய ரானில வகநீ
மாதி ரம்புகழ் ஞானகா ரகனுமாய் மகிழ்க"

அன்று தொட்டு இத்தலம் கேதீச்சரம் என அழைக்கப்பட்டது.

" தொழுதெழக் கெடுமிடர் வினைதானே" நித்திரைக்குச் செல்லும் பொழுதும், நித்திரை விட்டெழும் பொழுதும் "சிவநாமம்" உச்சரிக்கப்பட வேண்டும் என்பதாம்.

உயிர்கள் போகத்தையும், மோட்சத்தையும், செயல்களையும் விட்டு விலகியும் உய்தற் பொருட்டுப் போக வடிவு யோகவடிவு வீரவடிவு என்னுந் திருக்கோலங்களை எடுத்த செயல்களை வேதமும், புராணமும், பல வகையில் கூறுதலின் புல பல சரிதையர்" எனப்பட்டது.

"அருநட்டம்" என்பது பிறரால் செய்ய முடியாத பஞ்ச கிருத்தியத் திரு நடனங்களைக் குறிப்பிடும்.

சிவபெருமான் ஆடிய சில திரு நடனங்கள் பின்வருமாறு:

**1 அனவரத தாண்டவம்.**

பஞ்சாட்சரத் திருமேனிகொண்டுபஞ்சகிருத்தியம் விளங்க இடைவிடாதுஆடிக் கொண்டிருப்பது பஞ்ச கிருத்தியம் :

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், இவை பின்வருமாறும் கூறப்படும். சிருட்டி திதி, சங்காரம், திரோபாவம், அனுக்கிரகம் ஆகும்.

**2. ஆனந்த தாண்டவம்:**

பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்கள், கண்டு களிக்கும் பொருட்டு ஆடியது.

**3. கால மாறி ஆடியது:**

விக்கிரம பாண்டிய குமாரனான இராசசேகர பாண்டியனுடைய வருத்தமும் மலவலியுங் கெடும் பொருட்டு, மதுராபுரியிலே, வெள்ளியம்பலத்தில் இடத்திருப்பாதத்தை ஊன்றி வலத்திருப்பாதத்தைத் தூக்கிக் கால்மாறி ஆடியது

**4. கௌரி தாண்டவம்:**

தாருகாவனத்தில் விஷ்ணுமூர்த்தியாகிய மோகினியோடு ஆடியதை அம்மைகாணும் பொருட்டுத், திருக்கைலயில் ஆடியது.

**5. வீரட்டாகாச நடனம்:**

பிரணவப் பொருள் தெரியாத காரணத்தால், பிரமனை முருகன் சிறையில் வைத்தார். குமரனிடம் போய்ச் சிறையை விடுவித்துப் பிரணவப் பொருளைக் கேட்டார். குமரன் திருத்தணிகையில் சிவபிரானுக்குத் திருவாய் மலர்ந்தருளினார். அளவு கடந்த மகிழ்ச்சியால் சிவபெருமான் வீர அட்டாகாசஞ் செய்து ஆடியது

**6. சண்டதாண்டவம்:**

சிவபெருமான் திருவாலங் காட்டிலே வயிரவர் முகூர்த்தங் கொண்டு காளியோடு ஆடியது

**7. சத்தியா நிருத்தம்:**

தேவ மாதர்களின் மாங்கலியத்தைக் காக்கும் பொருட்டு பாற்கடலில் தோன்றி நஞ்சையுண்டு, ஒன்றும் பேசாது சயனித்து மற்றைநாட் பிரதோஷகாலம்வர அம்மையார்முன் ஆடியது.

8. கொடு கொட்டி நிருத்தம்:

திரிபுரதகனத்தை முடித்து, அம்மையார் தாளம்போடத் தமது திருக்கரங்களைக் கொட்டி ஆடியது.

9. பாண்டரங்க நடனம்:

தேர்ச் சாரதியாகப் பிரமனைக் கொண்டு திரிபுரதகனஞ் செய்யச் சிவபெருமான் சென்றபோது, பிரமனின் பிரிவை ஆற்றாது சரஸ்வதி வருத்த அவளை மகிழ்விக்கும் பொருட்டு சிவன் நீறணிந்து ஆடியது

10. பிரதம மகா சங்கார கிருத்திய நடனம்:

விரிவான விளக்கத்தைப் பின்னுரையிற் பார்க்கவும்

"பற்பல சரிதையர்"

ஆன்மாக்கள் வணங்கி உய்யுமாறு பல ஒழுக்கங்களையுடைய 64 மூர்த்தங்களைக் கொண்டவர்

"தாண்டவம்" என்பதன் பொருளைப் பின்னுரையிற் பார்க்கவும்.

3. *பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையின*
*ரறைகழல் சிலம்பார்க்கச்*
*சுண்ணமாதரித் தாடுவர் பாடுவ*
*ரகந்தொறு மிடுபிச்சைக்கு*
*உண்ணல் ஆவதோர் இச்சையின் உழல்பவர்*
*உயர்தரு மாதோட்டத்து*
*அண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்கு*
*அருவினை அடையாவே*

பதவுரை:

பெண்ணொர்பாகத்தர்- கௌரியம்பாள் என இத்திருத் தலத்தில் சிறப்பாக அழைக்கப்படும் உமாதேவியாரை இடப் பாகத்திலே கொண்டு விள்ங்குபவர்; பிறைதவழ் சடையினர் - மூன்றாம் பிறைச் சந்திரனைச் சடாமுடியிலே தாங்குபவர்;

அறைகழல் சிலம்பார்க்க - ஒலிக்கின்ற கழலும் சிலம்பும் மிகுந்த ஒலியை எழுப்ப; சுண்ணம் ஆதரித்து - திருவெண்ணிற்றைத் திருமேனியிலே பூசுபவரும்; ஆடுவர் பாடுவர் - நடனஞ் செய்பவரும் வேதங்களைப் பாடுபவரும்; அகந்தொறும் இடும்பிச்சைக்கு- வீடுகள் தோறுஞ் சென்று உணவை பிச்சையாகப் பெற்று; உண்ணல் ஆவதோர் இச்சையில் உழல்பவர் - பிச்சை யெடுத்து உண்பதில் பெருவிருப்பு உள்ளவர்; உயர்தரு மாதோட்டத்து - உயர்ந்த மரங்கள் உள்ள மாதோட்டத்தின் கண்ணே; அண்ணல் நண்ணும் - உலகின் கருத்தாவாகிய சிவபரம்பொருளை சென்றடைகின்றவர்க்கு; அருவினை அடையாவே - துன்பந்தருகின்ற தீய வினைகள் சாரமாட்டா.

பொழிப்புரை:

கௌரியம்பாளை இடப்பக்கத்திலே கொண்டும், பிறைச்சந்திரனை சடாமுடியிலே கொண்டும், ஒலியை எழுப்புகின்ற வீர்க்கழலையும், சிலம்பையும் அணிந்திருப்பவரும், திருநீற்றுப் பொடியை உடல்முழுவதும் பூசியிருப்பவரும், ஆடிப்பாடி இல்லங்கள் தோறும் பிச்சையெடுப்பவரும் அத்தகைய பண்புகளையும் செயல்களையும் உடையவரும் ஆகிய சிவபெருமான் அமர்ந்து அருள் பாலிக்கின்ற திருக்கேதீஸ்வரத்தில் சரணடைபவர்களுக்குத் துன்பங்கள் ஏற்படா.

விளக்கம்:

விபூதி அணிதல் நிலையாமையை விளக்கும். விபூதி ஒரு பொருட் பல சொல்லாகும்.

விபூதி - அழியாத (மேலான) ஞானத்தைக் கொடுப்பது

திருநீறு - தீவினை அனைத்தையும் நீறுபடுத்துவது

இரட்சை - தீமைகளில் இருந்து இரட்சிப்பது

சாரம் - ஆன்மாக்களின் மலமாசைப் பொக்குவது

பசிதம் - அறியாமையை அகற்றி ஞான ஒளியை நல்குவது

விபூதி நால்வகைப்படும்

**1. கற்பம்:**

குற்றங்களில்லாத கபில நிறமுடையபசுவின் சாணத்தில் இருந்து பெறப்படும் நீறு

**2. அநுகற்பம்:**

சித்திரை மாதத்திலே காட்டிலும் புற்றரை, வயலிலும் காய்ந்து கிடக்கும் சாணத்தில் இருந்து பெறப்படும் நீறு

**3. உபகற்பம்:**

காட்டிலே மரங்கள் உரோஞ்சுதலால் ஏற்படும் சாம்பரைப் பஞ்ச கௌவியத்தில் கலந்து நெற்பதருடன் சேர்த்து அக்கினியில் இட்டு வரும் நீறு

**4. அகற்பம்:**

மலைகளிலும் நிலங்களிலும் இயற்கையாய் விளைந்த சுண்ணத்தைப் பூசலாம். சமித்துக்களை ஓமாக்கினியில் சுட்டும் எடுக்கலாம்.

**விபூதியின் பலன்கள்**

கருநிற விபூதி - வியாதியை உண்டாக்கும்
பொன்நிற விபூதி - செல்வத்தைக் கெடுக்கும்
புகைநிற விபூதி - ஆயுளைக் குறைக்கும்
வெண்ணிற விபூதி -போகம் , மோட்சம் இரண்டையும்' கொடுக்க வல்லது

விபூதி தரிக்கும் முறை முதலியனவற்றை ஆறுமுக நாவலரின் சைவவினா விடையிற்காண்க

கழல் - வீரத்தையும் கொடையையும் வெளிப்படுத்தும் காலணி

சிலம்பு - யோகியர்க்கு முதல்வன்தன் திருவடியைக் காட்டும் ஒலி தோன்றுதற்குக் காரணம்.

இரண்டு சிலம்புகளும், இரண்டு வீரக்கழல்களும் நாலு வேதங்களைக் குறிப்பன. அவற்றில் இருந்து எழும் ஒலி வேத வாக்கியங்களாகும்.

"அகந்தோறும் இடும் பிச்சைக்கு
உண்ணலாவது ஓர் இச்சை"

தாருகாவனத்தில் இடம்பெற்ற புராணவரலாறு இவ்வரலாறு இந்நூலில் பிற இடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

புலித்தோல் உடுத்த வரலாறு - ததீசி யுத்தரபடலம் 100-101

கேழல் மருப்பணிந்த வரலாறு - ததீசியுததரபடலம் - 16 - 21

கங்கையைச் சடையில் வைத்த வரலாறு - ததீசியுததரபடலம் 363 - 377

உமாதேவியை இடப்பாகத்தில் வைத்தவரலாறு - ததீசியுத்தர படலம்378 - 388

அடிமுடி வரலாறு - கந்தபுராணம் அடிமுடி தேடிய படலம்

யானையுரி போர்த்த விபரம் தீசியுத்தர படலம் 128 - 153

தாண்டவம்

தாண்டவம் என்பதன் பொருளைத் திருமந்திரத்திற் காணலாம்.

"தாண்டவம் ஆனதனி எழுத்து ஓர் எழுத்து
தாண்டவம் ஆனது அனுக்கிரகத் தொழில்
தாண்டவக் கூத்துத் தனிநின்ற தற்பரம்
தாண்டவக் கூத்துத் தமனியம் தானே"

"அ" என்ற எழுத்துச் சிவனைக் குறிக்கும் "அ" - அசபை எனப்படும். அசபா மந்திரம் - அதுமோன மந்திரம். எனவே இது பேசா எழுத்தாகும். தனி எழுத்து

"ஓர் எழுத்தாலே உலகு எங்கும் தான் ஆகி"

என்கின்றது திருமந்திரம்

"அ" எனப்படும் எழுத்து சர்வ அணுக்களிலும் உண்டு. சகல அசையும் அசையாப் பொருட்களிலும் வெறுவெளியிலும் உண்டு.

"உ" சக்தியைக் குறிக்கும்

அ+உ = ஓ என ஓசைப்படும். இது மகரத்துடன் சேர இலிங்கமாகும். அதுவே ஆவடையார்.

"தாண்டவம் ஆனது அனுக்கிரகத் தொழில்" எனவே அனுக்கிரகத் தொழில் செய்யும் ஓர் அற்புதச் செயற்பாடாகும்.

தாண்டவக் கூத்திற் சிவபரம் பொருள் தனித்தே நிற்பர்.

"தமனியம்" என்பதால் இது தூயவெளியிலே நிகழும். அனுக்கிரகம் என்பது கிருபை

4. பொடிகொள் மேனியர் புலியதள் அரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத்து
அடிகள் ஆதரித் திருந்தகே தீச்சரம்
பரிந்த சிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல்லார்தம்மேல்
மொய்த் தெழும் வினைபோமே

பதவுரை:

பொடிகொள் மேனியர் - திருவெண்ணீற்றை நன்கு அணிந்த திருமேனியை உடையவர்; புலியதள் அரையினர் - புலித்தோலை இடுப்பிலே கட்டிக்கொண்டவர்; விரிதருகரத்து - தன்னுடைய விசாலமான கையிலே; ஏந்தும் வடிகொள் மூவிலை வேலினர் - மூன்று கிளைகளை உடைய கூரிய முத்தலை வேலினைக் கொண்டவரும்; நூலினர் - முப்புரி நூலினை அணிந்த மார்பினை உடையவரும்; மறிகடல் மாதோட்டத்து - ஒன்றன் பின் ஒன்றாக அலைகள் வீசுகின்ற கடலை உடைய மாதோட்டம் என்ற நகரிலே; அடிகள் ஆதரித்திருந்த கேதீச்சரம் - சிவபெருமான் விரும்பி அமர்ந்துள்ள திருக்கேதீச்சரத்தை; பரிந்த சிந்தையராகி, - மிகுந்த அன்புடைய மனதை உடையவராகி; முடிகள் சாய்த்தபடி பேணவல்லார் மேல்- சிவனின் திருவடிகள் மேல் தலையைத் தாழ்த்தி வணங்கும் பயிற்சி உடையவராய் அவரைத் துதிக்கின்ற அடியார்கள்பால்; மொய்த்தெழும் வினைபோமே- தீவிரமாகச் சூழ்ந்த வருகின்ற துன்பங்கள் விலகிவிடும்.

**பொழிப்புரை:**

திருக்கேதீஸ்வரன் நீறணிந்த திருமேணியைக் கொண்டவர். புலித்தோலை அரையில் கட்டிக்கையிலே முத்தலைச் சூலத்தை ஏந்தியவர். முப்புரிநூலை யணிந்த மார்பையுடையவர். அலைகள் மோதுகின்ற கடலை உடைய மாதோட்டத்திலே மேவுகின்ற சிவனின் திருவடிகளிலே தலையைச் சாய்த்து வணங்கிப் போற்றும் சிவனடியார்கள் மேல் உள்ள துயரங்களனைத்தும் அகன்றுவிடும்.

**விளக்கம்:**

திரோதான சக்தியென்பது சனனி, உரோதயித்திரி, ஆரணி என் மூன்றாய், அயன், மால், உருத்திரன் எனப்படுகின்ற மூவரிடத்துந் தங்கி படைத்தல், காத்தல், அழித்தலைச் செய்கின்றது என்பதன் அடையாளமே மூவிலைச்சூலம்.

முடிகளைச் சாய்த்தலும், அடிகள் பேணலும் "நான்", "எனது" என்ற அகந்தையை விடுவதற்கு வழியாகும்.

வினை - ஆகாமியம் பிராரப்துவம் சஞ்சிதம் என மூவகைப்படும். இப்பிறப்பிலே செய்யப்படும் வினை, தீவினை, நல்வினை என இருவகைப்படும். நான் என்ற அகந்தையோடு செய்யும் நல்வினை மேலும் பிறப்பதற்கு வழி வகுக்கும். அவை பசு வினையாக மாறுவதே இதற்குரிய காரணம். என்செயலல்ல, சிவன் செயல் என்ற மனப்பாங்குடன் செய்யப்படுவன, சிவவினையாக மாறி, பிறப்பொழிக்க வழிவகுக்கும்.

ஆகாமிய வினை

- தீவினை
- நல்வினை
  - சிவ வினை
  - பசுவினை

முத்தலை வேல் - இச்சாக்தி, ஞானாசக்தி, கிரியா சக்தி என்று உரைப்பாருமுளர்.

சிவனொன்றே பிறப்பு இறப்பு என்னும் நச்சுவட்டத்தில் இருந்து ஆன்மாவைப் பிரித்தெடுக்க வல்லது.

5. "நல்லர் ஆற்றவும் ஞானநன் குடையர்தம்
மடைந்தவர்க் கருளிய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடல் மாதோட்டத்து
எல்லையில் புகழ் எந்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைந்தேத்தி
அல்ல லாசறுத் தரனடி யிணைதொழும்
அன்பராம் அடியாரே"

**பதவுரை:**

மலிகடல் மாதோட்டத்து - முத்து சங்கு முதலிய கடல் வளம் நிரம்பிய கடற்கரையின் கண்ணே உள்ள மாதோட்டம் என்னும் நகரிலே; எல்லையில்புகழ் எந்தை கேதீச்சரம் - முடிவில்லாத புகழையுடைய எமது தந்தையாகிய சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கேதீச்சரத்தை; இராப்பகல் நினைந்தேத்தி - இரவும் பகலுஞ் சிந்தித்து; அல்லல் அறுத்து - துன்பங்களுக்குக் காரணமாகிய மலமாயை கன்மங்களை நீக்கி; அரன் அடி இணைதொழும் அன்பராம் அடியார் - சிவபெருமானுடைய ஞானாசக்தி கிரியா சக்தி ஆகிய இரண்டு திருவடிகளையும் மெய்யன்பால் வணங்கும் அடியார்கள்; ஆற்றவும் நல்லவர் - நல்ல செயல்களைச் செய்து நன்மையடைபவர்கள்; தம்மடைந்தவர்க்கு அருளிய வல்லார் - தம்மையடைந்த நல்லவர்களுக்குத் திருவருள் செய்யும் வல்லவர்; பார்மிசை வான்பிறப்பிலார் - பிறப்பு இறப்பு என்னும் சமுத்திரத்தில் சிக்கமாட்டார்.

**பொழிப்புரை:**

நல்லறிவைப் பெற்றவரும், மெய்யறிவை மிகுதியாக உடையவரும் தம்மையடைந்தால், அவர்களுக்கு விண்ணிலும், மண்ணிலும் நல்லருளை வழங்கவல்லவரான பிறப்பும் இறப்பும், ஆதியும் அந்தமும் இல்லாதவர். எல்லையில்லாத புகழையுடைய

சிவபரம் பொருள் மாதோட்டத்தில் உள்ள திருக்கேதீச்சரத்தில் அருளாட்சி செலுத்தி வருகின்றார். அவரைத் தம் உள்ளத்தில் இடைவிடாது இருத்தி வணங்குகின்றவர்களின் துன்பங்களையும் குற்றங்களையும் நீக்கியருளுபவர்.

**விளக்கம்:**

இராப்பகல் நினைந்து என்பதனால் ஞானிகளின் தன்மைகளையும் அவர்கள் அடைகின்ற பெரும் பேற்றையும் கூறுகின்றது. அரன் அடி தொழும், என்பதால் அகந்தை அற்ற நிலையையும் கூறுகின்றது. சிவபெருமான் அடியவர்களின் நிலைக்கேற்க அவர்களை ஆட்கொள்ளுவார். "திருவருட்பயனில்" கூறப்பட்டது நோக்கற்பாலது.

"பார்வை யென மாக்களைமுன் பற்றி பிடிப்பதற்காம்
போர்வெயெனக் காணார்புவி"

மகாவிஷ்ணுமூர்த்தி ஞானியென்று அழைக்கப்படுபவர். அவருக்கு ஆழிப்படை சிவனால் அளிக்கப்பட்டது. ஆழிப்படை யென்பது சக்கரத்தைக் குறிக்கும். அவருடைய ஐந்து ஆயுதங்களுள் சக்கரமும் ஒன்று" ஞானநன்குடையவர்தம்........"
என்ற கூற்றுக்கு இந்நிகழ்ச்சியை உரைகூறுவாரும் உளர். விபரத்தைப் பின்னுரையிற் காணலாம்.

6. பேழை வார்சடைப் பெருந்திரு மகடனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கையற் கண்ணிபால் அருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம் பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீள் மார்பர்க்கே
தீச்சரம் பிரியாரே

**பதவுரை:**

பேழைவார் சடை- பெருமை பொருந்திய நீண்ட சடாமுடியின் கண்ணே; பெருந்திரு மகள் தன்னை- நீர் பெருகுகின்ற கங்காதேவியை வைத்து; ஒருபாகம் மாழையங்கயற்கண்ணிபால் அருளிய - தனது இடப்பாகத்தை அழகும் இளமையும் உள்ள அழகிய கயல் மீனின் கண்ணைப் போன்ற கண்ணையுடைய உமாதேவிக்குக் கொடுத்தருளி; பொருளினர் குடிவாழ்க்கை - வேதாகமப் பொருளை உணர்த்தி அங்கே அமர்ந்திருக்கின்றவரும்; கேழல் வெண்மருப் பணிந்த - பன்றியினது வெண்மையான கொம்பினையணிந்த; நீள்மார்பர் - நீண்ட மார்பினையுடையவரும்; வாழையம் பொழில மந்திகள் களிப்புற - வாழைமரச் சோலைகளிலே மந்திகள் மகிழ்ச்சியுடன் வாழுகின்ற; மாதோட்ட கேதீச்சரப் பிரியாரே - மாதோட்டத்தில் உள்ள திருக்கேதீச்சரத்தை பிரியாது என்றும் விளங்குபவர்; திருக்கேதீச்சரநாதன்.

**பொழிப்புரை:**

பெருமை பொருந்திய நீண்டசடா முடியின் கண்ணே பெருக்கெடுத்து வந்த கங்கா நதியினை யடக்கியவரும்; இடப்பாகத்தை உமாதேவியாருக்கு அளித்தவரும்; வேதாகமப் பொருளை உணர்த்துபவரும், பன்றியின் கொம்பையணிந்த நீண்ட மார்பையுடையவரும், குரங்குகள் அதிகமாக வாழுகின்ற வாழைமரச்சோலைகளையுமுடைய மாதோட்டத்திலேயுள்ள கேதீச்சரத்தில் இருக்கும் அடியார்களை விட்டுப்பிரியார்.

**விளக்கம்:**

பகீரதன் ஒரு சூரிய குலத்தரசன். சகரன் புத்திரனும் தனக்குப் பாட்டனுமாகிய சகரரைக் கபில முனிவரின் சாபத்தினின்றும் காக்கும் பொருட்டு,நீண்டகாலஞ் செய்த தவத்தின் பேறாய் ஆகாய கங்கையைப் பூலோகத்துக்குக் கொண்டு வந்தான். கங்கை பெருக்கெடுத்து பூலோகத்தில் உள்ள உயிரினங்களை அழியாது தடுப்பதற்காக, சிவபெருமான் கங்கையை ஒரு துளியாக்கித் தன் சடாமுடியில் வைத்தனர். "வாழ்யம் பொழில்" என்பனால் 7ஆம் நூற்றாண்டில் உன்னதமான விவசாய நாகரிகம் அங்கு பரவியிருந்தது என்பது தெளிவு.

7. "பண்டு நால்வருக் கறமுரைத் தருளியபல்
லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிங் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழின் மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறும் துதிசெய அருள்செய்கே
தீச்சர மதுதானே"

**பதவுரை:**

வண்டு பண்செயு மாமலர்ப் பொழின் மஞ்ஞை நடமிடு மாதோட்டம்- வண்டினங்கள் ரீங்காரஞ் செய்யும் பெரும் பூஞ்சோலைகளிகளில் மயிலினம் நடமாடும் மாதோட்ட நகரின் கண்ணே; தொண்டர் நாள்தொறும் துதிசெய- அடியார்கள் எக்காலமுந் தோத்திரஞ் செய்து வணங்க; அருள் செய- திருவருள் பாலிக்க; பண்டு நால்வருக்கு அறமுரைத்தருளி - பழையகாலத்தில் சனகர் முதலிய நாலுமுனிவருக்கும் அறமுதற் பொருள்களை உணர்த்தி யருளி; பல்லுகினில் உயிர் வாழ்க்கை கண்ட நாதனார் - பதினாலு அண்டங்களிலும் வாழ்கின்ற உயிரினங்களின் வாழ்க்கையைக் கண்டசிவபெருமான், கடலிடங் கைதொழத் - கடலாற் சூழப்பட்ட உலகத்தார் கைகூப்பி தொழும் பொருட்டு விரும்பி உறைகின்ற திருக்கோயில் கேதீச்சரமேயாம்.

**பொழிப்புரை:**

பண்டைக் காலத்தில் சனகாதிமுனிவர்களுக்குக் கல்லால மரத்தின் கீழ் அறம் உணர்த்தருளி பல வண்டங்களிலும் வாழுகின்ற உயிரினங்களுக்கு வாழ்வையளித்த தலைலர் சிவபெருமான் கடலின் அருகேயமர்ந்திருக்கின்ற அடியார்கள் அக்கோயிலானது வண்டுகள் ரீங்காரஞ் செய்யும் பெரும் மலர்ச்சோலைகளில் மயிலினங்கள் நடமாடும் மாதோட்டத்தில் அமைந்துள்ளது. நாள் தோறும் அடியார்களால் இடைவிடாது தோத்திரஞ் செய்து வணங்கப் படுபவர், அக்கோயிலில் இருந்து திருவருள் பாலிக்கின்றார்.

**விளக்கம்:**

நித்திய யோகியாகிய சிவபரம் பொருள் கல்லால நிழலின் கீழ் தென்முகமாகச் சிவயோகபாவனையில் அமர்ந்து சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதரர் ஆகிய முனிவர்களுக்குச் சிவாயநம என்ற ஐந்தெழுத்தைக் கையிலமைத்துக் காட்டினார். அதன் காரணமாக அவர் தெட்சணா மூர்த்தி என அழைக்கப் படுகின்றார். பெருவிரலையும் சுட்டுவிரலையும் ஒன்று சேர்த்துச் சிவமும் சக்தியும் ஒன்றென்பதையும் அடுத்த மூன்று விரல்களும் உயிரையுந் திரோதான சக்தியையும், மலத்தையும் விளக்கும் சைகைகளாம்.

திருவருட்பயனில் கூறப்பட்டுள்ளது "ஊன நடன மொருபா லொருபாலாம் ஞான நடம் தானடுவே நாடு"

ஐந்தொழுத்தில் நடுவெழுத்து ஆன்மா. அது ஊனத்தை முன்னிட்டவழி ஊனமாம். ஞானத்தை முன்னிட்ட வழி ஞானமாம்" என்பது பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் உரை. திருவாசகத்திலும் கூறப்பட்டுள்ளது.

" நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறைமுறைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங் கறைமுறைத்தா னாயிடினுங்
கொன்றான் காண் புரமூன்றும் கூட்டோடே சாழலோ"

தீமைகளை இறைவன் அனுசரிக்கமாட்டார் என்பது இதன் உட்பொருள்

"பல்லுகினில் உயிர்வாழ்க்கை"
என்பதைத் திருநாவுக்கரசு நாயனார் அழுத்தியிருக்கின்றார்.

"எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பமேவி யிருந்தாய் நீயே ...."

8. தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன லங்கெட அடர்த்தவற் கருள்செய்த
தலைவனார் கடல் வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்து
உன்னி அன்பொடும் அடியவர் இறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே

**பதவுரை:**

தென் இலங்கையர்- தமிழ்நாட்டின் தென்பாலுள்ள இலங்கையின்; குலபதி - அரக்கர் குலத்தின் அரசனான இராவணன்; நலிந்து எடுத்த - உடல் வருந்தித்தூக்கிய; மலையை - கைலாய மலையை; அவன் முடிதிண்தோள் தன்னலங்கெட - இராவனுடைய பத்துத்தலைகளும் வலிமை பொருந்திய தோழும் வலிமைகெடர், அடர்த்து - வருத்தி; அவற்கு - அதன் பின் அவனுக்கு; அருள் செய்த அருளினைச் செய்த; தலைவனார் - தலைவனாகிய சிவபெருமான்; கடல் வாய் - கடலின் மூலமாகப் பெறப்பட்ட; பொன்னிலக்கிய முத்து மாணிகளும் - அழகிய பொன்னாபரணங்களும், முத்துகளும், இரத்தினங்களும், பொருந்திய - அமைந்து விளங்கும்; மாதோட்டத்து உன்னி - மாதோட்டத்தை விரும்பி நினைத்து; அன்பொடும் - பற்றுடன்; அடியவர் இறைஞ்சு - அடியார்கள் வணங்குகின்ற; கேதிச்சரத்தின் தலைவரான சிவபரம்பொருள் உள்ளாரே.

**பொழிப்பு**

இலங்கையின் தலைவனாகிய இராவணன் வருந்தி எடுத்தான். கைலாயமலையை அவனுடைய தோழ்களும் முடிகளும் தன் நிலையிலிருந்து கெடுமாறு வருத்தி, அதன் பின் அவனுக்கு அருள் செய்தவர் சிவபெருமான். கடல் மூலமாகப் பெறப்படும் பொன்னும், முத்துக்களும், இரத்தினங்களும் அமைந்து விளங்கும் மாதோட்ட நகரின் கண்ணே, மெய்யடியார்கள் தியானித்துப்

போற்றி வழிபடும் கேதீச்சரத்தின் கண்ணே வீற்றிருப்பவர் கேதீச்சரநாதன்.

**விளக்கம்:**

தன்னுடையதாய் ஒவ்வொருநாளும் மா இடித்து இலிங்கம் அமைத்து வணங்குவதை இராவணன் அவதானித்தான். தன்னுடை தாயின் கடின வேலையை உணர்ந்த இராவணன், சிவபெருமான் எழுந்தருளியிருந்த கைலாய மலையைப் பெயர்த்து இலங்கைக்குக் கொண்டுவரச் சித்தம் உடையனாயினான். பத்துத்தோழையும் கொடுத்து மலையைப் பெயர்த்த பொழுது, சிவபிரான் தனது காற்பெருவிரலால் சிறிது அழுத்தினார். அழுத்தவும் இராவணன் மலையுள் நசித்து அவதியுற்றான். வாகீச முனிவரின் ஆலோசனைப் படி, ஒரு தலையையும் நரம்புகளையும் வீணையாக அமைத்துச் சாமகானம் இசைத்தான். சிவன், இராவணனை மன்னித்து, அவனுக்கு நல்லருள் சொரிந்தார். இந்த நிகழ்ச்சியை திருஞானசம்பந்தர் திருகோணமலைப் பதிகத்தில் பின்வருமாறு பாடியுள்ளார்.

"எடுத்தவன் தருக்கையிழித்தவர் விரலால்
ஏந்திட ஆத்தமாம் பேறு கொடுத்தவர்...."

இராவணனுக்கு அருள் செய்தல் சிவபிரானின் காருண்ணியத்தைக் காண்பிக்கின்றது.

9. பூவு ளானும்ப பொருகடல் வண்ணனும்
புவியிடந் தெழுந்தோடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா
வித்தக மென்னாகும்
மாவு பூகமும் மகதலியும் நெருங்குமா
தோட்டநன் நகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே தீச்சரத்
திருத்தவெம் பெருமானே

**பதவுரை:**

பூவுளானும் - தாமரை மலரின் வீற்றிருக்கின்ற பிரமதேவரும்; அப்பெருகடல் வண்ணனும் - அழகிய அலைகள் மோதுகின்ற திருப்பாற்கடலில் யோகநித்திரை செய்கின்ற நீல நிறங்கொண்ட திருமாலும்; புவியிடம் - பூமியிலிருந்து, எழுந்தோடி - பிரமா தன்முன் தோற்றியுள்ள ரூபத்தைக் காண்பதற்காக அன்னப்பட்சி ரூபமாக மேல் நோக்கிச் சென்றதும்; திருமால்பன்றி வடிவெடுத்து நிலத்தைக் கிழித்துப் பாதலத்தை நோக்கிச் சென்றதும் பின்பு; நின் அடியிணைநின் திருவடிகளைக்; காண்கிலா வித்தகம்- காணாத நின்சாதுரியம் என்னவாகும், மாவும் பூகமும் கதலியும் நெருங்கும் மாமரங்களும்; கமுகமரங்களும், வாழைமரங்களும் நெருங்கியிருக்கின்ற சோலையை உடைய; மாதோட்டம் எனும் சிறப்புடைய நகரத்தைப் பொருந்தி; தேவிதன்னொடும் - கௌரியம்பாள் உடனும்; இருந்து- கேதீச்சரம் என்னும் தெய்வத்தன்மையுள்ள தலத்திலே மேவுகின்ற எம்பெருமானே.

**பொழிப்புரை:**

தாமரையில் வீற்றிருக்கும் பிரமனும் கடல் வண்ணனாகிய திருமாலும் முறையே அன்னப்பட்சியாகி எழுந்து பறந்து அவ்வுருவின் முடியைக்காணாது திருமால் பன்றியுருவெடுத்து நிலத்தைக் கிழித்துக் கொண்டு பாதாலம் வரையும் சென்றது. இறுதியில் இருவரும் தோல்வி கண்டு திரும்பி வந்து தீ வடிவமாக நின்ற பெருமானை வணங்கித் துதித்து சிவபரம்பொருளை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டார்.

**விளக்கம்:**

மாலும் அயனும் தாம்தாம் முழுமுதற் கடவுள் என்று வாதாடித் தங்களுக்குள் முரண்பட்டனர். சிவபெருமான் சோதிப்பிழம்பாய்த் தோன்றி இருவரையும் அடிமுடி காணுமாறு அசரீரியில் அறிவுறுத்தினர். அயன் ஆகாயத்தை நோக்கியும், திருமால் பாதலத்தை நோக்கியும் சென்றனர். தம்முயற்சியில் இருவரும் தோலிவுயுற்று ஈசனை வணங்கிநின்றனர். இதனால் சிவபெருமான் தன் திருவிளையாடல் மூலம் தானே முழுமுதற்

கடவுள் என்பதனை உலகறிய வைத்தார்.

இருவருக்கும் இடையிலே தோன்றிய தீப்பிழம்பு "இலிங்கோற்பவர்" என்ற மூர்த்தமாக ஆராதனை செய்யப்படுகின்றது. 64மூர்த்தங்களில் இதுவும் ஒன்று

10. "புத்த ராய்ச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகிநின் றுணபவர் இயம்பிய
ஏழைமை கேளன்மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்து
அத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சரம் அடைமின்னே"

**பதவுரை:**

புத்தராய்ச்சில புனைதுகி லுடையவர் - பௌத்த சமயத்தைச் சேர்ந்த அழகிய தைத்த ஆடையை அணியும் குருமார், புறனுரை சமணாதர் - மாறுபாடாகப் பேசுகின்ற சமணமுனிவர்கள்- சமணார், ஏத்தராகி - ஏமாற்றுவோராகி; நின்று உண்பவர் - நின்று கொண்டு புசிப்பவர்; இயம்பியகூறிய; ஏழைமை - அறியாமையான உரையினை; கேளன்மின் - கேட்டுக் கொள்ளாதீர்கள்; மத்த யானையைமறுகிட உரிசெய்து - மதம் கொண்ட யானையைக்க கலங்கவைத்துத் தோல் உரித்து; போர்த்தவர்- போர்த்துக் கொண்டவர்; அத்தர் - தலைவராகிய ஈஸ்வரன்; மாதோட்டத்து மன்னு பாலவியின் கரையிற் - அருளாட்சி புரிகின்ற மாதோட்டத்தில் அமைந்துள்ள பாலாவித் தீர்த்தக்கரையிலே உள்ள, கேதீச்சரம் அடைமின்னே - திருக்கேதீச்சரத்தைச் சென்று அடையுங்கள்.

**பொழிப்புரை:**

அலங்கரிப்புள்ள ஆடைகளை அணிந்துள்ள புத்தர்களும், மாறுபாடாகப் பேசுகின்ற சமணர்களும் ஏமாற்றுவோராகி நின்று

கொண்டு உண்பவர் சொல்லிய அறியாமை உரையினை நம்பாதீர்கள். மதங்கொண்ட யானை கலங்கும்படி அதன் தோலை உரித்து போர்த்தவர் எமது ஈசனாகிய சிவபெருமான் அருள் புரிகின்ற திருக்கேதீச்சரத்துக்குச் செல்லுங்கள்

**விளக்கம்:**

கன்னமதம், கபோலமதம், பீஜமதம் என்றழைக்கப்படும் மும்மதம் உள்ள யானையின் தோலே உரிக்கப்பட்டது.

எத்தர் - ஏமாற்றுவோர்.

*11.* மாடெ லாமண முரசெனக் கடலினது
ஒலிகவர் மாதோட்டத்து
ஆடலே றுடை யண்ணல் கேதீச்சரத்து
அடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம்பந்தன் சொல்
நவின்றெழு பாமாலைப்
பாட லாயின பாடுமின் பக்தர்கள்
பரகதி பெறலாமே

**பதவுரை:**

மாதோட்டத்துக் கடலினது ஒலிகவர் - மாதோட்ட நகரின் ஒருபக்கத்தில் உள்ள கடலினது ஓசை; மாடெலாமண முரசென- மாதோட்டத்து எல்லாப்பக்கங்களிலும் ஒலிக்கின்ற மணவீட்டு மேளமென; ஆடலேறுடை - வெற்றி பொருந்திய இடபவாகனத்தே அடிகள் வீற்றிருக்கின்ற; அண்ணல் கேதீச்சரத்து அடிகளை - தலைவராகிய கேதீச்சரத்து இறைவனை; அணிகாழிநாடு உள்ளார்க்கு - அழகிய சீர்காழிப் பதியில் வசிப்பவர்களுக்கு; இறைஞானசம்பந்தன்; சொல்நவின்றெழு பாமாலை - சொற்களால் தோன்றுகின்ற பாக்களின் தொடை; பாடலாயின் - பாடல்களை பக்தர்கள் பாடுமின்- சிவனடியார்களே பாடுங்கள்; பரகதி பெறலாமே- சிவானந்தப்பரகதிப் பேறு அடையும் நிலையைப் பெறலாம்.

**பொழிப்புரை:**

மாதோட்டக் கடலின் கண்ணேஎழுகின்ற ஒலியானது வீட்டுக்குரிய மங்கல வாத்தியம் போல் எல்லா இடங்களிலும் சூழ்ந்து ஒலிக்கும். வெற்றியை உடைய இடப வாகனத்தில் வீற்றிருக்கும் கேதீச்சரநாதரை, சீர்காழிப்பதியில் உள்ள திருஞான சம்பந்தரின் பாமாலையால் பாடிப்பணிமின். அவ்வாறு இப்பாடல்களைப் பாடினால் சிவபதம் பெறலாம். இது 4 வகைப்படும் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியம். பிறிதோரிடத்தில் விளக்கம் உண்டு.

**விளக்க உரை:**

முரசுகள் மூவகைப்படும்- மணமரசு, வீரமுரசு, தியாகமுரசு இங்கே கூறப்பட்டது, மங்கலமான மணமுரசாகும். ஆடல் - பல்பொருள் ஒருசொல் இங்கே விட்டுணுவாகிய வீரத்தைக் குறிக்கும்

வீரமுரசு - போர்க்களத்தில் வெற்றீசட்டிய பின், ஒலிக்கப்படும் முரசு. இது அரசர்களுக்கும் படைநடத்து வோருக்கும் உரியது

தியாகமுரசு- இது கொடைமுரசு; அரசர்களுக்கும் உரியது பதிகத்தின் பலன் கூறப்படுதலால் இது திருக்கடைக் காப்பு எனப்படும்.

கணபதிதுணை

# திருக்கேதீஸ்வரப் பதிகம்

சுந்தரமூர்த்திநாயனார் அருளியது
அவர்காலம் கி. பி. 9ம் நூற்றாண்டு

**பண்: நட்டராகம்** **இராகம்: நாட்டை**

திருச்சிற்றம்பலம்

1. "நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானியுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத்தானே"

**பதவுரை:**

நத்தார்படை ஞானன் பசு ஏறி-பாஞ்ச சந்நியம் என்ற சங்கைப் படையாக ஏந்திய ஞானனாகிய விட்டுணு எனும் இடபத்தில் ஏறியவரும்; நனை கவிழ்வாய் மத்தம் மத யானையுரி போர்த்த மணவாளன்- மதநீரினாலே ஈரலித்துத் தொங்குகின்ற வாயினையும், மதத்தினால் மதிமயக்கம் உற்றுச் செருக்கடைந்த யானையினது தோலையுரித்துப் போர்த்த மங்கல நாயகராகிய சிவபெருமான்; பத்தாகிய தொண்டர்தொழு - மெய்யன்புடைய சிவனடியார் தொழுகின்ற; பாலாவீயின் கரைமேல் - பாலாவியென்ற, புனிததீர்த்தத்தின் கரையிலே; செத்தார் எலும்பணிவான் - பேரூழிக் காலத்தின் முடிவிலே இறந்த பிரமா, விட்டுணுக்களின் எலும்பைத்தரித்தருளிய; கேதீச்சரநாதனேயாகும். "பத்தாகிய தொண்டர்" என்பதற்குப் பத்துச் சிலபுண்ணியங்கள் செய்த தொண்டர் எனபாரும் உளர்.

**பொழிப்புரை:**

பாஞ்ச சந்நிய சங்கைப் படையாகத் தாங்கியருளிய விட்டுணுவை இடபவா கனமாக்கிக் கொண்டவரும், மதயானையினது தோலை யுரித்துப் போர்வையாக்கிக் கொண்டவரும், மங்கல நாயகரும், பிரமா விட்டுணுக்களின் எலும்பை அணிந்தவரும் பாலாவியின் கரைமேல் எழுந்தருளியவரும் கேதீச்சரநாதனே.

**விளக்கம்:**

சங்கு, சக்கரம், தண்டு, வில், வாள் என்னும் ஐவகைப் படைகளுள் சங்குப் படையைக் கொண்டிருப்பது சிறப்பானதாகும். சங்குப் படையொன்று மட்டுமே கடலில் தோற்றியது. சங்குப் படை கொண்ட பத்மநாதன் உலகை நீத்துக் கடலில் துயில்பவரல்லர். அவருடைய துயில் சிவயோகத்துயில் அல்லது அறிதுயில் எனப்படும். அறிதுயில் செய்யும் காரணத்தால் அவர் ஒரு யோகி. அதனால் ஞானி என்ற காரணத்தால் காசினி காக்கும் கருமம் விட்டுணுவுக்கு அளிக்கப்பட்டது. அத்தகைய விஷ்ணு சிவனைத் தாங்கி நிற்பது சிவ சமயத்தின் சிறப்பாகும். மதயானை என்பது ஆணவத்தின் சின்னம். மதயானையின் தோலை யுரித்த காரணத்தால், ஆணவமலத்தை அடக்குதற்குச் சிவசிந்தனை அவசியம் என்பது பெறப்படும்.

ஒவ்வோர் ஊழிக்காலத்து முடிவிலும் பிரமா விட்டுணுக்களின் அதிகாரகாலம் முடிவடையும். அவர்கள் இறந்து விடுவதனால், சிவன் ஒருவரே நித்தியர். "பத்தாகிய தொண்டர் "ஆகிய உண்மை ஞானிகள் "நான்" என்ற ஞாபகத்தை இழந்து எல்லாஞ் சிவமயம் என்ற நிலையில் இருப்பர். நித்திரையில் கைப்பொருள் விலகுவது போன்று "நான்", "எனது" என்ற எண்ணக்கருக்கள், சிவஞானியை விட்டு அவர் அறியாமல் விலகிவிடும். "பத்தாகிய தொண்டர்" என்பதற்குப் பத்துச் சிவ புண்ணியங்கள் என்றுஞ் சொல்லலாம். கயாசுரனாகிய யானையின் தோலை உரித்த வரலாறும் பத்துச் சிவபுண்ணியங்களும் பின்னுரையிற் கூறப்பட்டுள்ளன.

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கேபிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

இத்தேவாரம் அடியார்களின் உண்மை நிலைப்பாட்டை விளக்கும். விட்டுணு சிவனைத்தாங்கியதும், யானைத் தோலால் சிவன்தன்னைப்போர்த்த வரலாறும் பிற இடத்தில் காண்க இந்நூலில்.

2. "சுடுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுற கின்றான்றிருக் கேதீச்சரன் தானே

**பதவுரை:**

சுடு ஆர் பொடி நீறும் - நன்கு சுடப்பட்ட பொடியாகிய திருநீறும்; நல்லதுண்டப்பிறை - களங்கமில்லாத மூன்றாம் பிறைச் சந்திரனையும்; கீளும் - கிழிக்கப்பட்ட சேலைக் கச்சையும்; கடமார் களி யானை யுரி - மதம் பொருந்திய தருக்குக் கொண்ட யானையின் தோலையும்; அணிந்த கறைக்கண்டன் - அணிந்த நீல கண்டத்தை யுடையவர்; பட ஏர் இடை மட வாளொடு - பாம்பின் படத்தை ஒத்த அழகிய இடையை உடைய இளமை ததும்பும் கௌரி யம்பாளுடன்; பாலாவியின் கரைமேல்- பாலாவி தீர்த்தக் கரையிலே; திருக்கேதீஸ்வரம் - திருக்கேதீஸ்வரம் என்ற திவ்விய தலத்திலே; திடமாவுறைகின்றான் - நிலையாகப் பிரத்தியட்சமாக எழுந்தருளியிருக்கின்றான்.

**பொழிப்புரை:**

நன்கு நீறிய திருவெண்ணீற்றையும் இளம்பிறைச் சந்திரனையும், கச்சையையும் அணிந்தவரும், யானையின் தோலை மேலாடையாக அணிந்தவருமான பெருமான் திருக்கேதீஸ்வரத்தில் பிரத்தியட்மாக எழுந்தருளியிருக்கின்றார்.

**விளக்கம்:**

ஊழிக்காலத்தில் மட்டுமன்றி உலகில் தோற்றும் பொருட்கள் முடிவில் பிடிசாம்பராகிவிடும் என்பதனை விளக்கு தற்காக வெண்ணீறினை அணிந்து கொண்டார். பட்டினத்தடிகளும் கூறினார்.

" முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும்
முடிவில் ஒரு பிடி சாம்பராவதும் திண்ணம்"

3. *"அங்கம் மொழி யன்னாரவர் அமரர் தொழுதேத்த*
*வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்*
*பங்கஞ்செய்த பிறை சூடினன் பாலாவியின் கரைமேல்*
*செங்கண்ணர வசைத்தான்திருக் கேதீச்சரத் தானே.*

**பதவுரை:**

அங்கம் மொழி அன்னாரவர் - வேதங்களின் அங்கங்களை ஓதுகின்ற அந்தணர்களும் அவர் போன்றவர்களும்; அமரர் தொழுதேத்த - தேவர்களும் வணங்கித் துதிக்க; வங்கம்மலிக்கின்ற கடல் மாதோட்ட நன்னகரில் - பிறநாட்டு வியாபாரக் கப்பல்கள் நிறைந்து நிற்கின்ற கடலினால் சூழப்பட்ட மாதோட்டம் என்ற திவ்விய நகரிலே; பங்கஞ் செய்த பிறைசூடினான் - மூன்றாம் பிறைச்சந்திரனைச் சடாமுடியிலே அணிந்தவரும்; செங்கண் அரவசைத்தான் - சிவந்த கண்களையுடைய பாம்பை அரையிலே கட்டிக் கொண்டவருமாகி; பாலாவியின் கரை மேல் திருக்கேதீச்சரத்தானே - பாலாவித்தீத்தக் கரையிலே அமர்ந்திருக்கும் திருக்கேதீச்சரத்தின் தலைவனேயாம்.

**பொழிப்புரை:**

வேதத்தின் அங்கங்களை ஓதுகின்ற அந்தணர்களும், தேவர்களும் பிறராலும் துதிக்கப்படுகின்றவரும், இளம்பிறைச் சந்திரனைச் சூடியவரும், பாம்பைக் கச்சையாக அணிந்தவரும் ஆகிய கேதீச்சரநாதன் அந்நிய நாட்டுக் கப்பல்கள் நிறைந்த கடலாற் சூழப்பட்டுள்ள மாதோட்ட நகரின் கண்ணுள்ள திருக்கேதீச்சரத்தில் அமர்ந்திருக்கின்றார்.

**விளக்கம்:**

27 நட்சத்திரங்களுக்குத் தந்தையான தக்கன் அந்த மங்கையர் 27 பேரையும் சந்திரனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான். சந்திரனோ ரோகிணியின்பால் அதிக அன்பு கொண்டிருந்தான். ஏனைய 26ம் நட்சத்திரங்களயும் புறக்கணித்தான். ஏனைய பிள்ளைகளின் நிலையைக் கண்டு கோபமடைந்த தக்கன் தன்னுடைய தவவலிமையைப் பயன்படுத்திச் சந்திரனைச் சபித்தான். தேய்ந்தழியும் தன் நிலைப் பாட்டில் இருந்து பாதுகாப்புப் பெறச் சந்திரன் சங்கரினிடஞ் சரனடைந்தான். கருணாகர மூர்த்தியாகிய சிவன் சாபவிமோசனங் கொடுத்துச் சந்திரனைத்தன் சடாமுடியில் தரித்தான். அதனால் சிவன் சந்திரசேகரன் என அழைக்கப்பட்டார்.

சந்திரன் தேய்வுற்ற நிலைக்கு விநாயகர், சபித்ததாகவும் ஒரு புராணவரலாறு உண்டு. கந்தபுராணம் - தட்சகாண்டத்தில் காண்க.

முன்னொரு காலத்தில் தருகாவனத்தில் முனிவர்கள் இருந்து வேதாகமங்களைக் கற்றும் அநுட்டானங்களைப் பயின்றும் ஆன்மிகமுன்னேற்றத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். அவர்கள் தம் பத்தினிமார்களின் கற்பின் ஏற்றம் கண்டு செருக்குற்று இருந்தனர். ஒழுக்கவாழ்விலும் அநுட்டானங்களிலும் தீவிர கவனத்தைச் செலுத்தி இறைவழிபாட்டை மறந்திருந்தனர். சிவசிந்தனை அற்ற முனிவர்களுக்கு நல்லறிவு புகட்டும் வண்ணம் அழகான பிச்சாடன வடிவெடுத்து அவ்விடத்தில் பிச்சை யேற்றார்.

பிச்சாடனரின் அழகில் மயங்கிய முனிபத்தினிமார் தங்களுடைய கற்பு நிலையை இழந்தனர். அதனைக் கண்டு ஆத்திரம் அடைந்த முனிவர்கள் சிவனை எதிர்த்துப் பெரும் போர் செய்தனர். தங்களுடைய தவலிமையினால் முறையே புலி, சூலம், மழு, பாம்பு, பூதப்படை, வெண்டலை, உடுக்கை, முயலகனை, ஒன்றன்பின் ஒன்றாக அவர்மேல் விடுத்தனர்.

சிவபெருமான் புலியைக் கொன்று அதன் தோலை அரையிற் கட்டினார். சூலத்தையும் மழுவையும் ஆயுதமாக ஏற்றார். பாம்பைக் கச்சையாகத் தரித்தார். பூதப்படையைத் தனதாக்கினார் வெண்டலையைப் பாத்திரமாக ஏற்றார். உடுக்கையைக் கையில் ஏற்று முயலகனைக்காலால் மிதித்தார். இவ்வாறு சிவனின் அளவிலா ஆற்றலையும், பகைவரை மன்னித்து ஆட்கொள்ளுந் தன்மையையும் காட்டுகின்றது.

"அங்கம் மொழி" என்பதை "அங்கம் ஒழி" எனப்பிரித்து உனரப்பாரும் உளர். சாபம் காரணமாகத் தனது உடலை ஒழித்து மன்மதன் முற்காலத்தில் திருக்கேதீச்சரத்திற் பூசித்தான் எனப் பொருள்படும். மூவுணவு, ஈருணவு, ஒரணவு உண்போர் முறையே ரோகியர் போகியர் யோகி என அழைக்கப்படுவர். பிச்சைமூலம் ஒருணவை உண்டு உயிரோம்பும் யோகியருக்கு முன் மாதிரியாகப் பிச்சையோட்டைச் சிவபெருமான் தாங்கினார்.

4. "கரியகறைக் கண்டன்நல்ல கண்மேலொரு கண்ணான்
வரிய சிறை வண்டியாழ்செயும் மாதோட்ட நன்னகருள்
பரியதிரை யெறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே

**பதவுரை:**

கரிய கறைக்கண்டன் - கருநிறமுள்ள கண்டத்தைக் கொண்டவரும; கண்மேலொரு கண்ணான் - இருகண்களுக்கு மேல் ஒப்பற்ற கண்ணை நெற்றியிலே உடையவரும்; தெரியும் மறை

வல்லான் -அறிஞர்களால் ஆராய்ந்து அறியப்படும் வேதங்களை உலகுக்கு அளித்தவரும்; வரிய சிறை வண்டு - வரிபொருந்திய சிறகுகளை யுடைய தேனீக்கள்; யாழ்செயும் - யாழொலி போன்ற இனிய ஒலியை எழுப்புகின்ற; மாதோட்ட நன்னகருள் - சிறந்த தெய்வத்தன்மை வாய்ந்த மாதோட்டத்திலே; பரியதிரை எறியா வரு பாலாயின்' கரைமேல் - மிகப்பெரிய அலைகளை வீசுகின்ற பாலாவிதீர்த்தக் கரையிலே, இடமாக இருந்து அருளாசி செய்கின்றவர் திருக்கேதீஸ்வரநாதனே.

**பொழிப்புரை:**

கருநீல கண்டத்தைக் கொண்டவரும் நால் வேதம் அளித்தவரும் நெற்றிக் கண்ணையுடையவரும் வண்டினங்கள் யாழின் இசையைப் போன்று ஓசையை ஒலிக்கின்ற மாதோட்ட நகரின் கண்ணே பாலாவித்தீர்த்தக் கரையிலே அமர்ந்திருப்பவர் திருக்கேதீஸ்வரநாதனே.

**விளக்கம்:**

நெற்றிக் கண் புருவநடுவில் அமைந்துள்ள மூன்றாவதுகண் ஐம்பொறிக் கணக்கிற்கு அப்பாற்பட்டது. ஞானத்தின் இருப்பிடம். யோகநிட்டையிலே இருக்கின்ற ஞானிகளின் சித்தம் புருவநடுவிலே குவிந்திருக்கும்.

5. “அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்ற கடன் மாதோட்டநன் னகரில்
பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியன் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்திருக் கேதீச்சரத் தானே.

**பதவுரை:**

அங்கத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருளி - அடியார்களின் உடலிலேயுள்ள நோய்கள்ள நீக்கியருளியும்; பங்கஞ் செய்த மடவாளொடு - இளமை நீங்காத உமாதேவியாருக்கு

இடப்பாகத்தைக் கொடுத்தருளியவரும்; வங்கம் மலிகின்ற கடல்-மரக்கலங்கள் அதிகமாகக் காணப்படும் கடலினாலே சூழப்பட்ட; மாதோட்ட நன்னகரில் - மாதோட்டம் என்ற சிறப்புக்கள் நிறைந்த நகரிலே; பாலாவியின் கரைமேல் பாலாவித் தீர்த்தத்தின் கரையிலே; தெங்கம் பொழில் சூழ்ந்த - தென்னந்தோப்புக்களால் சூழப்பட்ட சோலையிலே திருக்கேதீஸ்வரநாதன் திருவருள் பாலிக்கின்றார்.

**பொழிப்புரை:**

வினைவயத்தால் அடியவர்கள் அடைகின்ற நோய்களை நீக்கி அருள் பாலிக்கின்றவர், கப்பல்கள் நிறைந்த கடலினால் சூழப்பட்டுள்ள மாதோட்டம் என்னும் நகரத்திலேயுள்ள பாலாவி என்னும் தீர்த்தத்தின் கரையிலே தென்னஞ் சோலையில் இடபாரூடராய்க் கௌரியம்பாளுடன் திருக்கேதீஸ்வரத்தின் ஆதிநாயகராகிய சிவபெருமானே அமர்ந்திருக்கின்றார்.

**விளக்கம்:**

வினைவயத்தால் பிறந்த ஆன்மாக்கள் பிராரப்துவ, ஆகாமிய கன்மங்களை அனுபவிக்கும் வகையில் பிறவிதோறும் நோயாலும், பிறதுயரங்களினாலும் துன்புறுத்தப்படுபவர்களுக்கு இறைவன் வேண்டுவார் வேண்டுவனவற்றை யருளுவார். இங்கே வேண்டுவார் என்பது ஆன்மிக நிலையில் தகுதியுடையவரைக் குறிக்கும். சிறப்பாக இருவினையொப்பு, மலபரிபாகம் அடைந்தவர்கண் திருவருள் நன்கு படியும். திருவருட்பயன் என்ற நூலினை நோக்கற்பாலது.

*"உன்னுமுனதைய மிலதுணர்வா யோவாது*
*மன்னுபவந் தீர்க்கு மருந்து"*

6. *"வெய்யவினை யாயவடி யார்மேலொழித் தருளி*
*வையம்மலி கின்றகடன் மாதோட்டநன் னகரில்*
*பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்*
*செய்யசடை முடியான்றிருக் கேதீச்சரத் தானே"*

**பதவுரை:**

வெய்யவினை யாய அடியார மேலொழித்தருளி கொடிய பிராரப்துவ வினைகள் சிவனடியார்களைத் தாக்காது அருள்பவரும்; பையேரிடை மடவாளொடு - பாம்பின் படத்தினை ஒத்துள்ள இடையினைக் கொண்ட இளமை தழுவுகின்ற கௌரியம்பாளொடு; செய்யசடைமுடியான் சிவந்த சடாமுடியினை உடையவரும்; வையம் மலிகின்ற கடல் - பல்வேறு நாட்டில் உள்ள வணிகர்களின் கப்பல்கள் சந்திக்கின்ற துறைமுகக் கடலினைக் கொண்ட; மாதோட்ட நன்னகரில் - மாதோட்டம் என்ற தெய்வத்தன்மை வாய்ந்த நகரிலே; பாலாவியின் கரைமேல் திருக்கேதீச்சரத்தானே- பாலாவித்தீர்த்தக் கரையிலே இருந்து அருள் பாலிக்கின்றவர் திருக்கேதீஸ்வரத்தின் மூலமூர்த்தியாகிய சிவபரம் பொருளேயாம்.

**பொழிப்புரை:**

கொடிய துன்பங்களைத் தம்முடைய அடியார்களிடம் இருந்து விலக்கியருள் பாலிப்பவரும், கௌரியம்பாளுக்கு இடப்பாகத்தைக் கொடுத்தவரும், சிவந்த சடாமுடியை யுடையவரும், பல்வேறு நாட்டு வணிகக் குழுக்கள் கூடும் கடலினாலே சூழப்பட்ட மாதோட்ட நகரிலே எழுந்தருளி யிருக்கின்றவர், கேதீச்சரநாதனேயாவர்.

**விளக்கம்:**

செய்ய சடைமுடி யென்பதனைச் சுந்தரர் வேறு ஓர் தேவாரத்தில் "மின்னார் செஞ்சடைமேல்" என்று பாடியுள்ளார்.

மாதோட்டம் பாரிய ஏற்றி இறக்கும் வணிக மையமாக இருந்ததை "வையம் மலிகின்ற கடல்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

வெய்ய வினை யென்பது ஆன்மாவைப் பீடித்திருக்கும் ஆணவம் கன்மம், மாயை, ஆகிய மும்மலங்களையும் கருதும் திரோதான சக்தி ஒரு தூய்மையான சக்தி. அதன் செற்பாடு மூலமாக ஆன்மா இன்ப துன்பங்களை நீண்டநாள் அனுபவித்து களைப்படையும். அவ்வாறு களைப்படையுங் காலை பாசத்தினால்

ஏற்படும் கொடிய துன்பங்களையுணர்ந்து அதனின்றும் விலக அவாவுறும். தனு, கரண, புவன, போகம் மூலம் மாயை இன்பதுன்பங்களை யனுபவிக்க உதவுகின்றது. தனு உடலையும் அதைச் சார்ந்த தத்துவங்களையும் குறிக்கும். கரணம் (1) ஞானேந்திரியம (2) கன்மேந்திரியம் (3) அந்தக்காரணம் ஆகியவற்றைக் குறிக்கும். புவனம் நாம் வாழ்கின்ற சூழல், போகம் - இன்பதுன்பங்கள் இவை தன்மாத்திரைகள் மூலம் பெறப்படும்.

7. "ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்றிருக் கேதீச்சரத் தானே"

"ஊனத்துறு நோய்கள் அடியார் மேல் ஒழித்தருளி - உடம்பின் கண்ணே உள்ள கொடிய நோய்களை அடியார்களிடத்து நின்று விலக்கியருளி; பால்நத்துறு மொழியாளொடு - பாலிலும் உயர்வாக விரும்பத்தக்க இனிமையாக வசனிப்பவளாகிய கௌரியம்பாளுடனே; ஏனத் தெயிறணிந்தான் - பன்றியினது கொம்பை அணிந்த; வால் தத்துறு மலியுங்கடல் - வெண்மையான சங்குகள் நிறைந்த கடலினால்; மாதோட்டநன்னகரில் பாலாவியின் கரைமேல்- சூழப்பட்ட மாதோட்ட நகரிலே; பாலாவிதீர்த்தத்தின் கரையிலே; திருக்கேதீச்சரத்தானே - எழுந்தருளியவர் திருக்கேதீஸ்வரநாதனே.

**பொழிப்புரை:**

ஆன்மாக்களைத் தொடருகின்ற உடல் நோய், ஆன்ம நோய்களை நீக்கியருள்பவரும், இனிய மொழிபேசும் கௌரியம்பாளுடனே, பன்றியின் கொம்பினை யணிந்து, சங்குகள் நிறைந்த கடலினால் சூழ்ப்பட்ட மாதோட்ட நகரிலே அருள்பாலிப்பவர் திருக்கேதீச்சரநாதனே.

விளக்கம்:

இரணியாட்சன் என்னும் அசுரன் ஒருகால் பூமியைக் கவர்ந்து தனது வயிற்றினுள் மறைத்துக் கொண்டுபாதலத்தினுள் புகுந்தான். திருமால் பன்றி வடிவம் கொண்டு, பாதலம்புகுந்து, தனது கொம்பினாலெ அவனைக் குற்றிக்கொன்று, பூமியை மீட்டுக் கொணர்ந்தார். அவ்வீரச் செயல் புரிந்த காரணத்தால், தானே பரம்பொருள் என அகந்தையுற்று, அறிவிழந்து திரியலானார். பரம்பொருளான சிவபெருமான் பன்றியின் கொம்பைப் பிடுங்கியெடுத்தார். தானே உலகத்தின் கர்த்தா என்பதை நிருபிப்பதற்காக பன்றியின் கொம்பை மார்பிலே அணிந்து கொண்டார். இதுபராண மரபு

*ததீசியத்தரப்படலம் - 16-21*

8. *"அட்டன்னழ காவரை தன்மேலர வார்த்து*
*மட்டுண்டுவண் டாலும்பொழில் மாதோட்ட நன்னகரில்*
*பட்டவரி நுதலார்ளொடு பாலாவியின் கரைமேல்*
*சிட்டன்நமை யாள்வான்றிருக் கேதீச்சரத்தானே.*

பதவுரை:

அட்டன் - அட்டமூர்த்தம் எனப்படும் எண்வகைத் தோற்றங்களையுடையவனும்; அழகாக அரவு அரைத்தன்மேல் ஆர்த்து - பாம்பினை வரையின்மேல் அழகுறக் கட்டி; பட்டவரி நுதலாளொடு - பட்டம் என்ற ஆபரணத்தை இரேகை பொருந்திய நெற்றியிலே அணிந்த உமாதேவியை வாமபாகமாகக் கொண்டு; சிட்டன் - மேலானவரும்; நமையாள்வான் - நம்மை அடித்தொண்டராகக் கொண்டவரும்; வண்டாலும் பொழில் - தேனை அதிகமாக உட்கொண்டு மயங்கி வெறியாடுகின்ற வண்டினங்கள் உள்ள சோலைகளையுடைய மாதோட்ட நன்னகரில் - மாதோட்டம் என்றதிவ்விய நகரிலே; பாலாவியின் கரைமேல் திருக்கேதீச்சரத்தானே - பாலாவியின் கரைமேல் எழுந்தருளி யிருக்கும் தலைவன் சிவபரம்பொருளே.

**விளக்கம்:**

பெண்கள் நெற்றியில் அணியும் ஒருவகை ஆபரணம், பட்டம் எனப்படும். சிவபெருமான், அட்டமூர்த்தியென்றும், எண்தோளான் என்றும் அழைக்கப்படுவர். நிலம், நீர், காற்று ஆகாயம் தீ, ஆகிய பஞ்சபூதங்களும், சந்திரன், சூரியன் இயமானன் ஆகிய எட்டும் ஒருங்கு சேர அட்டன் என அழைக்கப்பட்டார்.

இயாமானன் என்பது தலைவனைக் குறிக்கும். சிவபுராணத்தில் வரும் பகுதியில் "வெய்யாய் தணியாய் இயமானனாம்" என்பதற்கு நவநீதகிருஷ்ண பாரதியார் பின்வரும் உணரதந்துள்ளார். "வேள்வி இயற்றும் தலைவனின் உள் நின்று செலுத்தும் முறைமையால் தலைவனே" இது சிந்திக்கப்பாலது. சிட்டன் என்பது, மேலோன் சான்றோன், உத்தமன் எனப்பல எனப்பலபொருள் உண்டு. சிவபெருமானால் செயற்படுத்தப்படும் ஆன்மா எனக்கூறலாம். யாகஞ் செய்விப்போன் என்று கூறுவாரும் உளர்

9. *"மூவரென இருவரென முக்கண்ணுடை மூர்த்தி*
*மாவின்கனி தூங்கும் பொழின் மாதோட்ட நன்னகரில்*
*பாவம் வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்*
*தேவனெனை யாள்வான் திருக்கேதீச்சரத் தானே"*

**பதவுரை:**

மூவரென- அயன், அரி, அரன் எனமூவர்க்கும் காரணனாயுள்ளவரும்; இருவரென- சிவம் சக்தி என இருவராயுள்ளவரும்; முக்கண்ணுடைமூர்த்தி - சூரியன், சந்திரன், அக்கினி என மூன்றுகண்களையுடையவரும்; தேவன் - முத்தொழிலுக்கும், மூலகாரணனாய் இருப்பவரும்; எனை யாள்வான் - என்னைத் தனது அடித் தொண்டனாகக் கொண்டவனும், மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில் சுவைதரும் மாங்கனிகள் தொங்குகின்ற மாஞ்சோலை

களைக் கொண்ட மாதோட்டத்திலே, பாவம் வினை அறுப்பார் பயில் - இருவினைகளை நீக்குதற்கு இறைவனைத் தியானித்துக் கொண்டிருக்கின்ற; பாலாவியின் கரைமேல் - பாலாவித்தீர்த்தக் கரையின் கண்ணே; திருக்கேதீஸ்வரத்தானே - எழுந்தருளியிருப்பவர் திருக்கேதீஸ்வரன் என்று அழைக்கப்படும் சிவபரம் பொருளே.

**பொழிப்புரை:**

மூவர்க்கும் இருவருக்கும் மூலகாரணமாய் இருப்பவர் சிவபெருமான் எனக் கூறப்பட்டுள்ளது. மூன்று கண்களை யுடையவரும் சுவையான மாங்கனிகள் தொங்குகின்ற இடம், ஞானிகள் இடைவிடாது தியானித்துக் கொண்டு இருக்கும் இடம், பாலாவிதீர்த்தக்கரை இங்கே திருக்கேதீஸ்வரன் எழுந்தருளி யிருக்கின்றார்.

**விளக்கம்:**

பாவம் பயில்வார் என்பது, நல்வினை தீவினை இரண்டையும் ஒழிப்பதற்காகத் தியான நிலையை நாடியவரைக் குறிக்கும். நல்லன, தீயன, நல்லவன், தீயவன் என்ற வேற்றுமை ஞானிகளுக்கு இல்லை. இந்நிலையை இருவினையொப்பு என்பர். அந்நிலைக்கு அப்பால் சத்திநிபாதம் ஏற்படும். சத்திநிபாதம் என்பது சிவசக்தி முழுமையாகப் படியப்பெறுதலாகும். இவர்கள் சிவமயமாக இருப்பர். சிவபக்தி ஒன்று ஒழிய வேறு ஆசைகள், பாசங்கள் இல்லாதவர்

"தேவன் எனை ஆள்வான்"

அனைத்துக்கும் கர்த்தா என்பதை "ஒன்றேகுலம் ஒருவனே தேவன்" என்பர். அவரே அனைத்துக்கும் மூலகாரணன். கந்தப் புராணத்தில் யுத்தகாண்டத்தில் முருகப் பெருமானின் திருப்பெரு வடிவத்தைக் (விஸ்வரூபம்) கண்ட சூரன்பின் வருமாறு ஓலம் இடுகின்றான்.

*"கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் தன்னைப்
பாலனென் றிருந்தே னன்னாட் பரசிவை யுணர்ந்திலேன் யான்
மாயவன் தனக்கும் ஏனை வானவர்தமக்கும் யார்க்கும்
மூலகாரணனாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தியன்றோ"*

பாவங்களை ஒழிப்பதற்குச் சிறந்த இடம் பாலாவியென்று கூறப்பட்டுள்ளது. மாவின் கனிதூங்கும் என்பதனால் முதிர்ந்த நாகரிக சமுதாயம் அமைந்திருந்தது என்பது பெறப்படும்.

10. *"கறையார்கடல் சூழ்ந்தகழி மாதோட்டநான்னகருள்
சிறையார் பொழில் வண்டியாழ் செயுங் கேதீச்சரத் தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத்தமிழ் பத்துஞ் சொலக் கூடாகொடு வினையே"*

**பதவுரை:**

கறையார் கடல் சூழ்ந்த - கருநிறம் பொருந்திய கடலினாலே சூழப்பட்ட; கழிமாதோட்டநன்னகருள் - உப்பங்கழிகள் நிறைந்த நல்ல மாதோட்ட நகரிலே; பொழில் வண்டு யாழ் செயும் - சோலைகளிலே தேன் உண்ணும் வண்டுகள் யாழின் ஒலிபோன்ற இனிய ஓசைகளை எழுபப்புகின்ற; கேதீச்சரத்தானை - இங்கே எழுந்தருளியுள்ள பரமனை; மறையார் புகழ் ஊரன் - வேதங்களிலே வல்ல வேதியர்கள் வாழும் திருநாவலூர் என்னும் பதியைச் சார்ந்தவர்; அடித்தொண்டன் - சிவனடியார்க்கு அடியவன்; உரைசெய்த - பாடியருளிய; குறையா தமிழ் பத்தும் - குற்றமிலாத பத்துப் பாடல்களும்; சொல்லக் கொடு வினைகூடா - பாடக் கொடிய வினைப்பயனாகிய துயரங்கள் சேரா.

**பொழிப்புரை:**

கருங்கடல் சூழ்ந்த உப்பளங்கள் நிறைந்த மாதோட்டம் என்னும் நகரத்தே காணப்படும் அழகிய சோலைகளின் கண்ணே யாழ் ஒலிபோல் ஓசையை எழுப்புகின்ற வண்டினங்கள் உள்ள திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியுள்ள சிவபரம் பொருளை, வேதங்கள் வல்லோர் வாழுப் திருநாவலூரைச் சேர்ந்த அடியார்க்கு அடியவனாகிய நம்பியாரூரன் செய்த இப்பதிக்ததை பாடுபவர்களில் உள்ள துயரங்கள் மறைந்துவிடும்.

**விளக்கம்:**

திருவெண்ணெய் நல்லூரில் சிவபெருமானால் அடிமை கொண்ட பாங்கும் இங்கே உணர்த்தப்படுகின்றது. "அடித்தொண்டன்" என்பதனால்

இப்பாடலில் பதிகத்தின் பலன் சொல்லப் படுதலினால் இது திருக்கடைக்காப்பு எனப்படும்.

திரு - ஒரு சொற் பல்பொருள். தெய்வீகத்தன்மை மங்கலம் முதலியன

கடை - இறுதியான

காப்பு - காவல், திருநீறு, தெய்வம், முதலிய பல்பொருள் ஒரு சொல்

## பின்னுரை

உமாதேவியார் இடப்பாகத்தைப் பெற்றமை

"ஏகனை யாகிவைகு மெந்தைத தனிடப்பா லான
வாகுவை நோக்கு மெல்லை மற்றவ னுமையா டோன்றப்
பாகம திருத்தி யன்னாட் பரிவொடு கலந்து மேவிக்
கோகன தக்கண் ணானைக் குமரரை யயனைத் தந்தான்

தனது இடப் பாகத்திற் பொருந்தியபுயத்தை சிவபெருமான் நோக்கி யருளும் போது அப்புயத்தினின்றும் உமாதேவியரர் தோன்றியருளினார். அதன் பின்பு திருமாலையும், பிரமதேவரையும் சனகராதி முனிவர் நால்வரையும் சிருட்டித்தருளினார்.

கந்தபுராணம் - ததீசியுத்தரப்படலம் - 383 தஷகாண்டம்.

## சந்திரன் சாபம் நீக்கியமை

தக்கன் தன்னுடைய 27 பெண்பிள்ளைகளையும் சந்திரனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான். சந்திரன் அவர்களுள் ஒருத்தியான ரோகினிபால் அன்பு பூண்டு ஏனைய 26 பெண்களையும் உதாசீனஞ் செய்தான். அவர்கள் தங்கள் தந்தை தக்கனி டம் முறையிட்டனர். தக்கனுக்குக் கோபம் மூண்டது.

"போந்தனர் தக்கன் தன்பாற் பொருமியே பொலம்பூட்கொங்கை
ஏந்திழை மாதர் தங்கள் கேள்வன தியற்கை கூறக்
காந்திய வுளத்த னாகிக் கனன்றவன் கலை களெல்லாந்
தேய்ந்திலவாக வென்று தீமொழிச் சாபஞ் செய்தான்"

- சந்திகாபப்படலம் செய்யுள் -6

பிள்ளைகள் 26பேரும் துன்புற்று தமதுகணவனின் இயல்பை உரைக்கத் தக்கன் எரிந்து கோபித்து அச்சந்திரனின் கலைகள் அனைத்தும் தேய்ந்து இல்லையாகுக என்று சாபம் இட்டான்.

இந்தச் சாபத்தில் இருந்து தன்னைக் காப்பாற்றுதற்காக சந்திரன் கயிலைக்குச் சென்றான். அங்கே ஒரு காட்சி கண்டான். விநாயகப் பெருமான் சிறுதானிய உணவை உட்கொண்டு பெரு வயிற்றோடு ஒரு திருக்கையில் மோதகத்தையும் வைத்திருந்தார். சந்திரன் ஏளனமாக விநாயகரைப் பார்த்துச் சிரித்தான்.

*"எந்தைவாழ் கயிலை தன்னி விபமுகன் முதிரையாவுந்*
*தந்தபே ரக்கு மங்கைச் சகுலியு நோக்கி நக்கா*
*யந்தநா ளனையான் சீறியாருநிற் காணாராகி*
*நிந்தை தகல் வேநீ நீசரிற் றாகழ்தி யென்றான்"*

- சந்திரசாபப்படலம் செய்யுள் -11

சிறுதானியங்களை உட்கொண்டும் பெரிய வயிற்றையும் மோதகத்தையும் பார்த்து சிரித்தான். விநாயகர் சாபம் இட்டார்.

**சந்திரன் சிவனாரிடம் முறையிட்டான்**

*"தீர்ந்தனவன்றியே திங்க டன்னிடை*
*யார்ந்திடு கலையினை யங்கை யாற்கொளா*
*வார்ந்திடு சடைமிசை வயங்கச் சேர்த்தினான்*
*சார்ந்தில தவ்வழித் தக்கன் சாபமே"*

சிவபெருமான் தன்னுடைய நீண்டசடையிலே சந்திரனைத் தரித்தருளினார். தக்கன் இட்ட சாபம் அவ்விடம் அணுகிற்றிலது

கந்தபுராணம் - சந்திரசாபப் படலம் - 41

**கங்கையைச் சடாமுடியில் அணிந்தமை**

பகீரதன் கொண்டுவந்த ஆகாய கங்கை பெருக்கெடுக்க ஆரம்பித்தது. பூமியிற் பிரளயம் ஏற்படும் என்ற பீதியை ஏற்படுத்தியது இக் கங்கை உமாதேவியாரின் திருக்கரத்தில் இருந்து தோன்றியது என்றும் கூறப்பட்டுள்ளது.

*"வார்த்தன வுமையவண் மலர்க்கைத் தோன்றியே*
*யார்த்தெழு கங்கையிவ் வகில மெங்கணும்*
*போர்த்திட வொருவியாம் போற்றச் சென்னியிற்*
*சேர்த்தியன் றளித்துந் தேற்றி லாய்கொலோ"*

சிவபெருமான் கங்கையைத் தனது சடாமுடியிலே அணிந்து அதைக் கட்டுப்படுத்தினார்.

கந்தபுராணம்: - சந்திரசாபப் படலம் - 32 தஷகாண்டம்.

**சிவன் ஆலகால விஷத்தை உண்டமை**

*"விஞ்சிய திரைகெழு வேலை தன்வயி*
*னருசமன் றெழுதலு நடுங்கி நாமவன்*
*றஞ்சென வடியிணை சாரத் தான்மிசைந்*
*தஞ்சலென் றருளிய தயர்க்க லாகுமோ*

சந்திரசாபப் படலம் - 31

தேவர்கள் சிவன் உடைய திருவடிகளிலே தஞ்சம் அளிக்கவென்று சரணாகதி அடைய அவர் அஞ்ச வேண்டாமென்று அதனை உண்டார்.

**பன்றியின் கொம்பினையணிந்து**

இரணியாக்கன் பூமியைக் கவர்ந்து வயிற்றிடை வைத்துத் துண்ணெனப் பாதாள உலகம் புகுந்தான். திருமால் பன்றிவடிவம் கொண்டு பாதாளம் புகுந்து இரணியாக்கனைக் கொண்டு பூமியை

மீட்டார். இதனால் கர்வம் அடைந்த திருமால் பன்றியின் கொம்பைப் பிடுங்கித் தனது மார்பகத்தில் அணிந்தார். திருமாலின் ஆணவம் நீங்கியது.

"கண்டு கண்ணுதலவன்மருப் பொன்றினைக் கரத்தாற்
கொண்டு வல்லையிற் பறித்தலுமுணர்வுமுன் குறுக
விண்டு மற்றதும் பறிப்பினிங் கிவனென வெருவிப்
பண்டு போலநின் றேத்தலும் போயினன் பரமன்"

தத்சி யுத்தப் படலம் - 20

**தருகாவனத்தில் நடந்த திருவிளையாடல்**

"நராரியி னுரிவை நீத்து தக்கனே யாகி முக்கட்
பராபரன் சூலத்தோடு பலிக்கலனங்கை கொண்டு
முராரிதன் பாங்கர் செல்ல முனிவருக் கிருக்கை யாகத்
தராதல மதிக்க நின்ற தாருகா வனத்திற் புகுந்தான்."

ததீசியுத்தர படலம் -37

சிவபெருமான் தாருகா வனத்தில் நிருவாணியாய் புகுந்தார். அவனைக்கண்ட முனிவர் பத்தினிகள் அவரிலே மோகங்கொண்டு தங்கள் கற்பை இழந்தனர். இது பிக்ஷாடன வடிவம்.

தங்கள் பத்தினிமாரின் கற்பைக் கெடுத்த இவனைக் கொல்லுதற்காக முனிவர்கள் யாகஞ் செய்தனர்.

"கொடியதோர் வேஃவி யாற்றிக் கொல்லுது மிவனையென்னா
மடமைகொண் முனிவர் சூழ்ந்து மற்றோர் மகத்தைச் செய்தார்"

யாகத்தில் இருந்து முதல் புலியை ஏவினர். பின்பு மழு ஆயுதத்தை ஏவினர். புலியை உரித்து அரையில் கட்டினார். மழுவைக் கையிலேந்தனார். அதன்பின்பு மானை ஏவினார். சிவன்

இடத்திருக்கருத்தில் மானைப் பிடித்துத் தாங்கினார். பின்பு யாகத்தில் இருந்து பூதவெள்ளம் தோற்றின. பூதப் படையைத் தனது சேனையாக அமர்த்தினார். பின்பு வெண்தலையை அனுப்பினார் கள். அதுவும் அவரால் சடையில் வைக்கப்பட்டது. மந்திரங்களை மந்திரித்து ஏவினார்கள் முனிவர்கள். அவை யுடுக்கையாக மாறின.

அவ்வுடுக்கையை சிவன் ஏந்தி எனது காதில் ஒலித்துக் கொண்டிருக்குதி என அதனைப் பணித்தார். பின்பு முனிவர்கள் முயலகன் என்றொரு பூதத்தை ஏவினார்கள். முயலகனைத் தன்திருவடியின் கீழ் வைத்தார்.

அந்த நிலையையிலே சிவபெருமான் அநவரதத் தாண்டவம் புரிந்தார்.

*"நஞ்சணி கண்டத் தெந்தை நடநவில் செய்கை தன்னைக்*
*கஞ்சனு மாழியானுங் கண்டுகண் களித்துப் போற்றி*
*நெஞ்சக மகிழ்ந்து பாங்கர் நின்றனர் மகவான் றன்னோ*
*டெஞ்சிய வமரர் யாரு மிறைஞ்சுவார் போல வீழ்ந்தார்"*

கந்தபுராணம் - ததீசியுத்தர படலம்: ***37-125***

**யானையுரிபோர்த்த செயல்**

கயாசுரன் என்ற அசுரன் அரியதவத்தைச் செய்து பிரமதேவரிடம் அரிய வரங்களைப் பெற்றான். அதன் பின்பு அவன் யானையின் உருவத்தை யெடுத்துத் தேவர்களுக்கும் இந்திரனுக்கும் கொடுமைகள் புரிந்தான். சிவன் விஸ்வரூபத்துடன் யானையைத் தன்னுடைய நகங்களால் கிழித்துத் தோலைத் தன்தோள் மேல் போர்த்தார்.

ததீசியுத்தர படலம் : ***128 - 153***

## சைவபுண்ணியங்கள்

புண்ணியம், தருமம், அறம், நல்வினை என்பன ஒருபொருட் பல சொற்கள்

### சிவபுண்ணியங்கள்

1. சிவநாமஞ் செபித்து விபூதியணிதல்
2. தென்புலத்தார் கடன் செய்தல் - பிதிர்கடன்
3. விரதம் காத்தல்
4. சிவபூசை செய்தல் இது இருவகைப்படும்
   (அ) ஆன்மார்த்தபூசை
   (ஆ) பரார்த்த பூசை
5. மாகேசுரபூசை, குருபூசை செய்தல், செய்வித்தல்
6. தலதீர்த்த யாத்திரை செய்தல்
7. சைவநூல்களைக் கேட்டல், ஓதல், ஓதுவித்தல்
8. அபிஷேகஞ் செய்தல்
9. கொலை, களவு, கள், காமம், குருநிந்தை முதலியவற்றை விலக்கல்
10. கோயில், குளம் அமைத்தல், அமைப்பித்தல், பராமரித்தல்.

### சிவதொண்டுகள்:

திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருநந்தவனம் வைத்தல், ப்ததிரபுஸ்பம் எடுத்தல், பூமாலை தொடுத்தல், தூபம் இடுதல், தீபம் இடுதல், ஆனந்தக் கூத்தாடுதல், வாத்தியங்கள் ஒலித்தல், திருக்கோயில்களைத் தரிசித்தல், சிவனடியார்களைப் பராமரித்தல்.

திருவாரூர்த் திருத்தாண்டகம்:

*நிலைபெறுமா கிறண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலுமெம் பிரானுரடைய கோயில் புக்குப்*
*புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்*
*சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்*
*அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்*
*ஆரூரா என்றென்றே அலறா நில்லே*

திருநாவுக்கரசு நாயனார்

*"அரகர என்ன அரியதொன் றில்லை*
*அரகர என்ன அறிகிலர் மாந்தர்*
*அரகர என்ன அமரரும் ஆவர்.*
*அரகர என்ன அறும்பிறப் பன்றே"*

திருமந்திரம்.

விளக்கம்

அரன் - சிவன்
சி - சிவபெருமான்
வ - சக்தி

இவ்விரண்டும் பூவும் மணமும் போற்பிரிக்கமுடியாதவை

கரன் - ஒடுக்குபவன் "ன" மெய் மறையும் அரன் + கரன் = அரகர

*"கங்காளன் பூசும் கவசத்திருநீற்றை*
*மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்*
*தங்கா வினைகளுஞ் சாரும் சிவசக்தி*
*சிங்கார மான திருவடி சேர்வரே"*

திருமந்திரம்

இவ்விரண்டு பதிகங்களையும் ஓயாது நாள் தோறும் ஓதுவோர் பெறும் பயன்கள் - 16 பேறுகள்

"மிக்க புகழ் கல்விவலி வெற்றி யறிவழகு
மக்கள் பொன்னெல் நல்லூழ் மனத்துணிவு தக்கநுகர்
வீறிழமை யாயுள் வியாதியின்மை யாமிவையே
பேறுபதி னாறென்னப் பேசு"

மேற் பதினாறும் பெற்று வாழ்வீராக!

## திருமந்திரம்

எமது சமகாலச் சமுதாயத்தை எடைபோடுதற்குப் பின்வரும் இரு திருமந்திரப் பாக்கள் பயனுறும்.

"ஆற்றரு நோய்மிகு மவனி மழைகுன்றும்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுகைத் தான்றிருக கோயில்க ளானவை
சாந்திய பூசைக டப்பிற் றானே

"முன்னவனார் கோயிற் பூசைகண் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றுங்
கள்ளங் களவு மிகுந்திடுங் காசினிக்
கென்னரு ணந்தி யெடுத்துரைத் தானே"

கள்ளங் களவு - போலிவேலை, ஏமாற்றுதல்

கன்னியாயிருந்த காலையிலே இராவணன் துணைவி மண்டோதரி திருக்கேதீஸ்வரநாதனை வேதாகமப்படி பூசனை செய்து அருளாசி பெற்றாள் என்பது புராண மரபு.

"நேச மார்தரு மீசனை நிகழ்வதோர் குறியிற்
றேசு றக்கொடு தாபித்துத் திவ்வியார்க் கியங்கள்
வாச நீர்முத லாக்கொடு வைகலும் நெறியாற்
பாச மீதுறப் பூசனை புரிந்திட லானாள்"

இராவணனுக்கு மண்டோதரியைத் திருமணஞ் செய்த வாறும் கூறப்பட்டுள்ளது.

*"இந்திர னாதி தேவர் மருத்துவர் வசுக்கள் சித்தர்*
*மந்திர மறையோர் துன்றி மங்கலம் பெருக வாழ்த்த*
*எந்தைசீர் மறவா ஏந்தல் இராவணன் மயன் பயந்த*
*செந்திரு வனையா னைச்சேர்திருமணம் நிகழ்வித்தார்கள்"*

திருக்கேதீஸ்வர நாதனைப் பூசித்ததன் மூலம் மண்டோதரி யடைந்த வாழ்நாளை மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பதிந்துள்ளார்.

திருத்தில்லையில் அருளிய
குயிற் பத்து

*"ஏர்தரும் ஏழுல கேத்த எவ்வுரு வுந்தன் னுரவாய்*
*ஆர்கலி சூழ்தென் னிலங்கை அழகமர் வண்டோதரிக்குப்*
*பொருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானைச்*
*சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடானைக் கூவாய்"*

சிவபெருமான் தென்பாண்டி மண்டலத்தை நாடாகவும் திருப்பெருந்துறையினை ஊராகவுங் கொண்டு சீர்பெறத் திகழ்கின்றவன். அவன் தென் இலங்கை மண்டோதரிக்கு வரம்பிலாப் பேரின்பம் நுகருவித்தருளினான்.

மண்டோதரி- வண்டோதரி எனவும் பாடப்பட்டுள்ளார். பஞ்ச கன்னிகைகளுள் ஒருவர்

1. அகலிகை
2. சீதை
3. தாரை
4. துரொபதை
5. மண்டோதரி

### சிவபெருமானின் ஏழிசைத் தாண்டவமும் சபைகளும்

-படைத்தல் - திருநெல்வேலி - தாம்பிரசபை காளிகா அல்லது முனிதாண்டவம்

- காத்தல் - திருபு புத்தூர் - சிற்சபை - கௌரிதாண்டவம்

மதுரை - வெள்ளியம்பலம் - சந்தியா தாண்டவம்

அழித்தல் - இருண்ட நள்ளிரவு - சங்கார தாண்டவம்

மறைத்தல் - திருக்குற்றால் - இரத்தினசபை - திரிபுரதாண்டவம்

அருளல் - திருவாலங்காடு - இரத்தினசபை - ஊர்த்துவதாண்டவம்

ஐந்தொழில் - தில்லை - கனகசபை - ஆனந்ததாண்டவம்

**மூலம்:**

"ஆடல்வல்லான்"
திருவாடுதுறை ஆதீனம், 1967

சுந்தரமூர்த்திநாயனார் அவர்களின் முதல் பாடலில் வரும் "நத்தார்படை ஞானன்பசு வேறிந்தனை கவிழ்வாய்" என்ற அடியில் "பசு" என்பது இடபவாகனம் என்று உரைக்கப்பட்டுள்ளது. பாசம் ஆகிய ஆணுவமலத்தால் ஆன்மாக்காள் ஆதியில் மூடப்பட்டிருப்பார். திரோதான சக்தியைத் தொழிற்படுத்தி ஆணவமலம் என்ற பாசத்தில் இருந்து அவற்றைப் பிரித்துத் திருவருள் செய்ய வேண்டும் என்பதற்காக ஆன்மாக்களுக்கு சிவபெருமான் பிறப்பை வழங்குகின்றார். ஆதியில் ஆன்மாக்கள் பாசத்தால் (ஆணவம்) மூடப்பட்டிருந்ததால், ஆன்மாக்கள் பசு என அழைக்கப்பட்டனர். எனவே சிவனைச் சுமக்கும் கடப்பாடு ஆன்மாக்களுக்கு உண்டு என்புழி மேலோர்

### "அரகர" என அழைத்தல்

அரகர என்று பலமுறை கழறிச் சிவனை அழைக்க வேண்டும். இது ஓரடுக்குமொழி அரகர என்பது சிவ சிவ எனப்பொருள்படும். அரம் என்பது தேய்ததல் அழித்தலைக் குறிக்கும் ஆன்மாக்களில் உள்ள மும்மலங்களையும் தேய்த்து அழிக்கும் செயற்பாடு

உடையவராகையால் சிவபெருமான் அரன் என அழைக்கப்பட்டார். கரன் என்பது கரத்தலைக் குறிக்கும் கரத்தல் என்பது மறைத்தல், அழித்தல், ஒடுக்குதலாகிய பல செயற்பாடுகளை விளக்கும் ஒவ்வொரு யுகத்தின் முடிவிலும் ஆன்மாக்களைச் சிவபெருமான் தன்னிடம் ஒடுக்குவர். ஒடுக்குதல் காலத்தில் ஆன்மாக்கள் மீண்டும் மும்மலங்களால் மூடப்படும். சிவலோகம் முதலிய நாற்பதங்களிலும் ஞானிகளாயும், யோகிகளாயும் இருந்தவர் தவிர ஏனையோர் மும்மலத்தினால் பீடிக்கப்படுவர். மும்மலங்கள் என்பதற்காக, அவர்களுக்கு பிறப்பு அளிக்கப்படும். பிறப்பு என்பது ஆன்மாக்களுக்கு வழங்கப்படும் யோனிபேதங்களால் ஏற்படும் உடலங்களாகும்.

*"அரகர என்ன அரியது ஒன்று இல்லை*
*அரகர என்ன அறிகிலர் மாந்தர்*
*அரகர என்ன அமரரும் ஆவர்*
*அரகர என்ன அறும் பிறப்பு அன்றே"*

திருமந்திரம்

"அரகர" ஈடாக வேறொன்றில்லை அரகர என்றுசெபித்தால் அதற்கு ஈடானது வேறொன்றில்லை

*"அரகர என்று செபிக்கத் தெரியாத மக்கள் உளர்*
*அரகர என்று செபித்தால் தேவநிலையை அடையலாம்*
*அரகர என்று செபித்தால் பிறப்பு இறப்பு ஒழிந்து போம்."*

"ஓம் சிவாய நம"
ஓம் என்ற ஒலி - இறைசப்தம்
சிவாயநம - இறைநாமம்
நமசிவாய - இறைநாமம்

அ + உ = ஓ
அ = சிவன்
உ = சக்தி
ஓ = அர்த்த நாரீசரர்

"தானே பரம் சுடர் தத்துவமாய் நிற்கும்
தானே அகார உகாரம் அதாய் நிற்கும்
தானே பரம் சுடர் தத்துவக் கூத்துக்குத்
தானே தனக்குத் தராதலம் தானே"

திருமந்திரம்

சிவனுடைய சோதி எப்பொழுதும் தத்துவமாய்க் காட்சியளிக்கும்
சிவனே அகார உகாரமாகிய அர்த்தநாதீஸ்வரர்
சிவனின் சோதியில் ஞானிகள் திருக்கூத்தைக் காண்பார்கள்
சிவனுக்கு ஒப்ப வேறு தெய்வம் இல்லை
சிவனின் அருவ உருவ அருவுருவத் திருமேனிகள்
அகர உகரத்தில் அடங்கும்
இதுவெ காட்சியில் அர்த்தநாதீஸ்வரராகவும்
சப்தத்தில் "ஓ"ங்காரமாகவும் இலங்கும்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

"வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்" என்னும் (4ம் செய்யுள்)
-சுந்தரமூர்த்தி சுவாமிகள்
"செய்ய சடை முடியான்திருக்கேதீச்சரத்தானே" என்றும்
(6ம்செய்யுள்) கூறியுள்ளார்கள்

அவற்றுக்குச் சித்தாந்த விளக்கத்தைத் திருமூலர் வழங்கியுள்ளார்.

"நூலுஞ் சிகையும் உணரார் நின் மூடர்கள்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
பாலொன்றும் அந்தணர் பார்ப்பார் பரமுயிர்
ஓரொன் றிரிண்டெனின் ஓங்காரம் ஓதிலே"

திருமந்திரம் செய்யுள் 1665

இதன் அன்னுவயம்

இவ்விரண்டும் இல்லோ தோர் கோயில் தொண்டுக்கு அருகதை அற்றவர்கள் என்பதே

"கங்காளன் பூசுங்கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ்சிவசக்தி
சிங்கார மான திருவடி சேர்வரே"

திருமந்திரம் - **1666**

திருமால் ஆழிப்படை பெற்றமை
திருவாசகம்- திருத்தோணோக்கம்

"பங்கய மாயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கள் இடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரம்மாற் கருளியவா
றெங்கும் பரவிநாந் தோணோக்கம் ஆடாமோ"

சக்கரம் வேண்டிச் சிவபெருமான் திருவடிக்கண் நாடோறும் ஆயிரஞ் செந்தாமரை மலர் கொண்டு வழிபட்டு வந்தார். அவருடைய வழிபாட்டுறுதியை உலகினோர்க்கு உணர்த்தத் திருவுளங் கொண்டு ஒருநாள் ஒரு பூக் குறைவுண்டாயிற்று தன்கண்ணை யொப்பாகக் கொண்டு கண்ணைப்பிடுங்கிச் சாத்தி வழிபாட்டினை முடித்தார். சிவபெருமான் ஆழிப்படையினை யளித்தார்.

திருமந்திரம்

"சக்கரம் பெற்றுநல் தாமோ தரன்தானும்
சக்கரந் தன்னைத் தரிக்கவொண்ணாமையால்
மிக்கரன் தன்னை விருப்புடன் அர்ச்சிக்கத்
தக்கநற் சக்தியைத் தான்கூறு செய்தே"

சிவபெருமான் திருவருளால் மாலின் கையில் சக்கரம் வந்தமர்ந்தது. சிவனின் சக்தி முழுவதும் அதில் அடங்கியிருந்த காரணத்தால் அதைத் தாங்கும் வலிமை திருமாலுக்கு இருக்கவில்லை. சக்தி சிவனின் வேறில்லாத திருவருளே. சிவன்

தனக்குரிய வலிமையைக் கூறுசெய்து பகுத்துக் கொடுத்தார். விஷ்ணு அர்ச்சித்து வேண்டிய காரணத்தால்அவ்வாறு அரைப் பங்கைக் கூறுசெய்து கொடுத்தார்.

*"கூறது வாகக் குறித்தநற் சக்கரங்*
*கூறது செய்து கெடுத்தனன் மாலுக்குக்*
*கூறது செய்து கொடுத்தனன் சக்திக்குக்*
*கூறது செய்து தரித்தனன் கோலமே"*

சிவசக்திக்கு அரைப்பங்கும் விஷ்ணுவுக்கு அரைப் பங்குமாகத் தனது சக்தியைக் கொடுத்தார்.
திருப்பல்லாண்டிலும் இக்கதை கூறப்பட்டுள்ளது.

*"பாலுக்குப் பாலக் வேண்டி யழுதிடப்*
*பாற்கடல் ஈந்தபிரான்*
*மாலுக்குச் சக்கரம் அன்று அருள்*
*செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்*
*ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற*
*சிற்றம்பலமே இடமாகப்*
*பாலித்து நட்டம்பயில வல்லானுக்கே*
*பல்லாண்டு கூறுதுமே"*

திருஞானசம்பந்தர்மூர்த்தி நாயனாரின் தேவாரம்

*" தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதி சூடிக்*
*காடுடைய சுடலைப் பொடிபூசியென்னுள்ளங்கவர் கள்வன்*
*ஏடுடையமல ரான் முனை நாட்பணிந்தேத்தவருள் செய்த*
*பீடுடைய பிர மாபுரமேவிய பெம்மானிவன்றே"*

"ஏடுடைய மலரான்" என்பது அன்றலர்ந்த இதழ்கள் கலையாத பூவைக்குறிக்கும் திருமால் ஆயிரம் செந்தாமரைப் பூவைத் திருவடிகளில் சார்த்திப் பூசனை செய்த வரலாறு இதுவாகும்.

முறைவுரை

"கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுறு மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உண்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே"


GURU Printers.